விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 190 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 12 புதன்கிழமை (26.06.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## அதிபர், ஆசிரியர் சங்கங்கள்
# நாடளாவிய ரீதியில் இன்று சுகவீன விடுமுறைப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

நாடளாவிய ரீதியில் இன்று அதிபர் ஆசிரியர் சங்கங்கள் இணைந்து சுகவீன விடுமுறைப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளன.

நாடளாவிய ரீதியில் அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டுக்கு தீர்வை கோரியும், பெற்றோர்களுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள சுமைகள் மற்றும் மாணவர்களுடைய போசாக்குப் பிரச்சினைகள் ஆகிய 15

# தமிழக மீனவர்களின் படகு மோதியதில் கடற்படை வீரர் ஒருவர் மரணம்

- நெடுந்தீவு கடற்பரப்பில் சம்பவம்
- 10 தமிழக மீனவர்களும் கைது

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட தமிழக மீனவர்களை பிடிக்கச் சென்ற கடற்படை வீரர் தமிழக மீனவர்களின் படகு மோதியதில் உயிரிழந்தார்.

ரத்நாயக்க என்ற இலங்கை கடற்படை வீரரே இவ்வாறு உயிரிழந்தார்.

இதன்போது 10 15

# மக்களின் உரிமையை பறிக்க எவருக்கும் இடமளிக்க முடியாது

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

*(அம்பாறை)*

மக்களின் பாரம்பரியத்தை பெற்றுக் கொள்ளும் உரிமையைப் பறிக்க எவருக்கும் இடமளிக்க முடியாது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

*(15ஆம் பக்கம் பார்க்க)*



# குளவித் தாக்குதல் 35 பேர் பாதிப்பு
## கிளிநொச்சியில் சம்பவம்

(கிளிநொச்சி)

குளவித் தாக்குதலுக்கு இலக்காகி கிளிநொச்சி மாவட்டச் செயலக பணியாளர்கள் மற்றும் பொது மக்கள் என சுமார் 35 பேர் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட் 15

# இராமர் பாலத்தின் செயற்கைக்கோள் படம்




02

## நெல்லியடி நகரில்
# பிரபல்ய புடைவையகம் மீது பெட்ரோல் குண்டு வீச்சு

(கரணவாய்)

நெல்லியடி நகரில் பிரபல்ய புடைவையகம் மீது நேற்றுக் காலை பெட்ரோல் குண்டு வீச்சு இடம்பெற்றுள்ளது,

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் கடையின் பின்பக்க கதவு 04

## ஜூலை 2ஆம் திகதி
# பாராளுமன்ற விசேட அமர்வு

(கொழும்பு)

எதிர்வரும் ஜூலை மாதம் 2 ஆம் திகதி விசேட பாராளுமன்ற அமர்வு இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. 04

# கடன் மறுசீரமைப்புக்கு அமைச்சரவை அனுமதி
## இன்று உடன்படிக்கை கைச்சாத்து

(கொழும்பு)

பரிஸ் கிளப் மற்றும் ஏனைய பங்குதாரர்களுடனான கடன் மறுசீரமைப்பு உடன்படிக்கைகளுக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான 15

விசேட தன யோகம்
Handahana
ராசி சுப பலன்
சீட்டிழுப்பு யூன் 27
மில்லியன் பரிசுகள்
ரூ.50,000/- பரிசுகள்
NLB
தேசிய லொத்தர்
இசுரு யோக இலக்கத்தைப் பொருத்தி
5 இலட்சம் பரிசுகள்
இலட்சாதிபதி அதிர்ஷ்ட இலக்கத்தைப் பொருத்தி
இலட்சம் பரிசுகள்
100 லொத்தர்களுக்கு மேல் கொள்வனவு செய்ய
அழைக்கவும்...... நாங்கள் உங்கள்
கைகளுக்கே கொண்டு வந்து தருவோம்

0114607080
(C-2324)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குளவிக்கொட்டுக்கு இலக்காகி குடும்பப் பெண் உயிரிழப்பு

மஸ்கெலியாவில் குளவிக் கொட்டுக்கு இலக்கான குடும்பப் பெண் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சிவகுமார் அந்தோனி டெரிண்டா (வயது 44) என்ற இரண்டு பிள்ளைகளின் தாயே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருகையில், குறித்த பெண் கடந்த 19 ஆம் திகதி மஸ்கெலியா பெருந்தோட்ட யாக்கத்தின் தோட்ட கிலன்டில் பிரிவில் பணிபுரிந்து கொண்டு இருந்த வேளையில் குளவிக் கொட்டுக்கு இலக்காகியுள்ளார்.

இந்த நிலையில், உயிரிழந்த பெண் மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் டிக்கோயா கிளாங்கன் ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

இதனையடுத்து, அவர் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக பேராதனை போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்தார் என மஸ்கெலியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி புஷ்பகுமார தெரிவித்துள்ளார். (ம-7,10)

# பாடசாலை ஆசிரியை ஹெரோயினுடன் கைது

(கொழும்பு)

ஹெரோயின் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டு வந்தார் எனக் கூறப்படும் அனுராதபுரம் பகுதியில் உள்ள அரச பாடசாலையொன்றின் ஆசிரியை நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த ஆசிரியை தனது கணவருடன் இணைந்து ஹெரோயின் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டு வந்துள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

இந்நிலையில் விற்பனைக்காக வைத்திருந்த ஹெரோயினும் மீட்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட ஆசிரியையும், அவரின் கணவரும் நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர். (ம-7,10)

# உலக வங்கியிடமிருந்து 150 மில்லியன் உதவி

இலங்கையின் ஆரம்ப சுகாதார சேவையை மேம்படுத்துவதற்காக உலக வங்கி 150 மில்லியன் டொலரை வழங்குவதற்கு தீர்மானித்துள்ளது.

இந்த தொகையை வழங்குவதற்கு அதன் நிர்வாகக் குழு அனுமதி வழங்கியுள்ளதாக உலக வங்கி அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட இந்த திட்டத்திற்கு "இலங்கை ஆரம்ப சுகாதார சேவைகள் மேம்பாட்டு திட்டம்" என பெயரிடப்பட்டுள்ளது.

மாவட்ட மருத்துவமனைகள், மத்திய மருந்தகங்கள், பல் மருத்துவ கிளினிக் மற்றும் சுகாதார மருத்துவ அதிகாரிகளின் அலுவலகங்கள் போன்றன இதில் உள்ளடங்கும்.

குறித்த நிறுவனங்களில் சிகிச்சையின் தரத்தை மேம்படுத்துவதே இந்த திட்டத்தின் நோக்கமாகும்.

இதனூடாக நாடு முழுவதும் காணப்படுகின்ற ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆரம்ப மருத்துவ சேவை நிறுவனங்கள் பயனடையவுள்ளன. (ம-7,10)


# கேள்வி அறிவித்தல்
## சபை நிதி வேலைத்திட்டங்கள் - 2024
## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை.

1. பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் சபை நிதி மற்றும் பராமரிப்பு நிதிகளின் ஒரு பகுதி குறித்த வேலைத்திட்டத்திற்கான கொடுப்பனவுக்கென பயனபடுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.
2. **பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை** சார்பாக தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டுமான வேலைகளுக்காக கோருகின்றார்.
3. விலைக் கேள்வியானது தேசிய போட்டி விலைக் கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
4. கேள்விபெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் விலைக்கேள்வியாளர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக்கொள்ளப்படாதவராகவும், அட்டவணையில் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வீதி மற்றும் கட்டுமான அமைப்புக்கான சீடா (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
5. தேவையான தகைமைகள் விலைக்கேள்வி ஆவணத்தில் பகுதி 04 (Section IV) இலும் மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) இலும் உள்ளடக்கப்பட்டுள்ளது.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை (தொலைபேசி 021-205-0037 , தொலைநகல் 021-205-0036 ,E-Mail: pallaips@gmail.com)** இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலைநாட்களில் காலை **09.00** மணி முதல் **15.00** மணி வரை **26.06.2024** ஆம் திகதியிலிருந்து **10.07.2024** ஆம் வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
7. ஆர்வமுள்ள கேள்விதாரர் ***பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை*** எனும் இடத்திலிருந்து **26.06.2024** .ஆம் திகதியிலிருந்து **10.07.2024** ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மட்டும் காலை **09.00** மணிக்கும் **15.00** மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.**2,000/-** (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
8. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் இரு பிரதிகளில் தயாரித்து **தலைவர், பெறுகைக்குழு, பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை** எனும் முகவரிக்கு **11.07.2024** திகதி மாலை **14.00** மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
9. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| கேள்வி அடையாள இலக்கம் | வேலை விபரம் | நிதி மூலம் | மதிப்பீட்டுத் தொகை VAT நீங்கலாக (Rs Mn) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் (Roads) | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணைவைப்பு (Rs) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/45(3)/PL/CF/W/08/2024 | Renovation of Mullipathu Sub Office area Roads | Council Fund | 1.27 Mn | 45 நாட்கள் | C9 and C8 | 20,000.00 | 19.09.2024 |
| NP/14/45(3)/PL/CF/W/04/2024 | Renovation of Road Works for Pullopalai Sub Office Division | Council Fund | 1.67 Mn | 45 நாட்கள் | C9 and C8 | 25,000.00 | 19.09.2024 |

10. கேள்வி கோரல் பற்றிய முன் கூட்டிய கூட்டம் **03.07.2024** திகதி காலை **10.30** மணிக்கு **பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை** அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்துகொள்ளலாம். இதற்கு எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.
11. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை முழுமையாக அல்லது பகுதியாக நிராகரிக்கவோ, மீள்கேள்வி கோரவோ பெறுகைக்குழு தலைவருக்கு அதிகாரம் உண்டு.

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**பச்சிலைப்பள்ளி பிரதேசசபை,**
**பளை.**

(C-0677)


## இராமர் பாலத்தின்..

தமிழகத்தின் தனுஷ்கோடிக்கும் இலங்கையின் தலைமன்னாருக்கும் இடையிலான ஆழமற்ற கடற்பரப்பின் செயற்கைக்கோள் புகைப்படத்தை ஐரோப்பிய விண்வெளி ஆய்வு நிலையம் வெளியிட்டுள்ளது.

ஐரோப்பிய விண்வெளி ஆய்வு நிலையம் 1975 ஆம் ஆண்டு விண்வெளி ஆய்விற்காக நிறுவப்பட்ட அமைப்பாகும். இதன் தலைமையகம் பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் அமைந்துள்ளது. இதில் 22 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளனர்.

ஐரோப்பிய விண்வெளி ஆய்வு மையம் தனது X பக்கத்தில் copernicus sentinel - 2 என்ற தனது செயற்கைக்கோள் மூலம் எடுக்கப்பட்ட தமிழகத்தின் தனுஷ்கோடிக்கும் இலங்கையின் தலைமன்னாருக்கும் இடையிலான ஆழமற்ற கடற்பரப்பு பகுதியின் புகைப்படத்தை வெளியிட்டுள்ளது.

ராமர் பாலம் அல்லது ராம் சேது என அழைக்கப்படும் ஆதாமின் பாலம், ஒரு காலத்தில் இந்தியாவையும் இலங்கையையும் இணைத்த நிலத்தின் எச்சங்கள் என புவியியல் சான்றுகள் தெரிவிக்கின்றன.

இங்குள்ள கடல் பகுதி கடல்வாழ் உயிரின தேசிய பூங்காவாக அங்கீகரிக்கப்பட்டதாக The Hindu செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த கடல் ஒன்று முதல் 10 மீட்டர் ஆழம் மாத்திரமே கொண்டது.

இங்குள்ள நிலப்பரப்பு பறவைகள் இனப்பெருக்கம் செய்யும் இடமாக உள்ளது. ஏராளமான மீன்கள், கடல் பசு, டொல்பின்கள் ஆகியவை ஆழமற்ற குறித்த பகுதியில் செழித்து வளரக் கூடியதாக உள்ளதாக ஐரோப்பிய விண்வெளி ஆய்வு மையம் தகவல் வெளியிட்டுள்ளது. (ம-7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## SLIIT NORTHERN UNI யின் நான்கு வருட கல்வி அமைச்சினால் அனுமதிக்கப்பட்ட பட்டப்படிப்புகள்.

**BSc(Hons) in Information Technology Specialising in :**

- Information Technology
- Software Engineering
- Cyber Security
- Data Science
- Interactive Media
- Computer Systems & Network Engineering
- Information Systems Engineering

**BBA(Hons) Specialising in :**

- Business Analytics
- Marketing Management
- Accounting & Finance
- Logistics & Supply Chain Management

**SLIIT CITY UNI Program at NorthernUni**

- Foundation in Information Technolgy.
- BSc (Hons) Computer Science and Software Engineering.
- BSc (Hons) Computer Networking.
- Foundation in Business Management.
- BA (Hons) Business Administration.

**நினைவில் கொள்ள வேண்டிய திகதி**

விண்ணப்ப முடிவுத்திகதி

**26 JUNE 2024**

தகுதிகாண் பரீட்சை

**29 JUNE 2024**
(10:00AM TO 11:00AM)

**மொழி மூலம்**
தமிழ், ஆங்கிலம், சிங்களம்

(சி-1223)

NORTHERN UNI

Call us now:
**077 147 1471**

northernuni.lk
apply@northernuni.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரோகித் சர்மா அதிரடி

## அரையிறுதிக்கு முன்னேறியது இந்தியா



கப்டன் ரோகித் அரைசதம் விளாச, "சூப்பர்-8" போட்டியில் 24 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்று ரி-20 உலகக்கிண்ண அரையிறுதிக்கு இந்திய அணி முன்னேறியது.

வெஸ்ட் இண்டீசின் செயின்ட் லூசியாவில் நடந்த "ரி-20" உலகக் கிண்ண "சூப்பர்-8" போட்டியில் ("பிரிவு-1") இந்தியா, அவுஸ்திரேலியா அணிகள் மோதின. "டொஸ்" வென்ற அவுஸ்திரேலிய கப்டன் மிட்சல் மார்ஷ் "பீல்டிங்" தேர்வு செய்தார்.

இந்திய அணிக்கு கோலி (0) ஏமாற்றினார். இந்திய அணி 4.1 ஓவரில் 37/1 ரன் எடுத்திருந்த போது மழையால் போட்டி சிறிது நேரம் பாதிக்கப்பட்டது. மழை நின்ற பின், ஸ்டார்க் வீசிய 3 ஆவது ஓவரில் 4 சிக்சர், ஒரு பவுண்டரி அடித்த கப்டன் ரோகித் சர்மா, கம்மின்ஸ் வீசிய 5 ஆவது ஓவரில் ஒரு சிக்சர், 2 பவுண்டரி அடித்து அரைசதம் எட்டினார். ரிஷாப் பன்ட் (15) நிலைக்கவில்லை. ஸ்டார்க் "வேகத்தில்" ரோகித் (92) அவுட்டானார். சூர்யகுமார் (31), ஷிவம் துபே (28) ஓரளவு கைகொடுத்தனர்.

இந்திய அணி 20 ஓவரில் 5 விக்கெட்டுக்கு 205 ரன் எடுத்தது. பாண்டியா (27), ஜடேஜா (9) அவுட்டாகாமல் இருந்தனர்.

சவாலான இலக்கை விரட்டிய அவுஸ்திரேலிய அணிக்கு வார்னர் (6) ஏமாற்றினார். அர்ஷ்தீப் சிங் வீசிய 3 ஆவது ஓவரில் 2 பவுண்டரி, ஒரு சிக்சர் விளாசினார் கப்டன் மார்ஷ். பும்ரா வீசிய 4 ஆவது ஓவரில் 3 பவுண்டரி விரட்டிய ஹெட், ஹர் திக் பாண்டியா வீசிய 6 ஆவது ஓவரில் 2 சிக்சர் பறக்க விட்டார். குல்தீப் "சுழலில்" மார்ஷ் (37) சிக்கினார். பாண்டியா பந்தை பவுண்டரிக்கு விரட்டிய ஹெட், 24 பந்தில் அரைசதம் எட்டினார். மேக்ஸ்வெல் (20), ஸ்டாய்னிஸ் (2) சோபிக்கவில்லை. பும்ரா பந்தில் ஹெட் (76) அவுட்டானார். மாத்யூ வேட் (1), டிம் டேவிட் (15) ஏமாற்றினர்.

கடைசி ஓவரில் வெற்றிக்கு 29 ரன் தேவைப்பட்டன. பாண்டியா பந்துவீசினார். இந்த ஓவரில் 4 ரன் மட்டும் கிடைத்தது.

அவுஸ்திரேலிய அணி 20 ஓவரில் 7 விக்கெட்டுக்கு 181 ரன் எடுத்து தோல்வியடைந்தது. ஸ்டார்க் (4), கம்மின்ஸ் (11) அவுட்டாகாமல் இருந்தனர். (ரி-6)


# ஏல விற்பனை - 2023

கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் வருடாந்த இருப்புக் கணக்கெடுப்பின் தொடர் நடவடிக்கையாக பாவனைக்குட்படுத்த முடியாத பின்வரும் பொருட்கள் ஏல விற்பனை மூலம் 27.06.2024ஆந் திகதி மு.ப 10.30 மணிக்கு ஏல விற்பனை செய்யப்படவுள்ளது. இவ் பொருட்களை பார்வையிட விரும்புவோர் அலுவலக நேரத்தில் கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் பார்வையிட முடியும்.

| S.No | Articles | No |
|---|---|---|
| 1 | Revolving Chair | 1 |
| 2 | Battery 90 AM | 5 |
| 3 | Battery 35 AM | 1 |
| 4 | Vehicle Tyre 235x67x16 | 23 |
| 5 | Vehicle Tyre 215x65x16 | 30 |
| 6 | Vehicle Tyre 195x15 | 35 |
| 7 | Television 32 in | 1 |
| 8 | Gas cooker | 2 |
| 9 | water motor | 2 |
| 10 | water filter | 1 |
| 11 | Electric kettle | 5 |
| 12 | Stand Fan | 2 |
| 13 | Iceland (Defriger) | 6 |
| 14 | Scanner | 2 |
| 15 | water dispenser | 1 |
| 16 | Hand phone | 3 |
| 17 | Soler Panal | 2 |
| 18 | விறகு | 2 Load |
| 19 | பாலைமரம் 10 அடி | 13 |
| 20 | பாலைமரம் 07 அடி | 3 |
| 21 | பாலைமரம் 04 அடி | 16 |
| 22 | பாலைமரம் 14 அடி | 1 |
| 23 | பாலை வளை மரம் 16அடி | 4 |
| 24 | கம்பஸ் மரம் 18 அடி | 2 |
| 25 | கம்பஸ் மரம் 10 அடி | 2 |
| 26 | கம்பஸ் மரம் 11 அடி | 12 |
| 27 | கம்பஸ் மரம் 12 அடி | 18 |
| 28 | கம்பஸ் மரம் 08 அடி | 20 |
| 29 | கம்பஸ் மரம் 04 அடி | 7 |
| 30 | றீப்பை 03 அடி | 66 |
| 31 | றீப்பை 07 அடி | 14 |
| 32 | கதவு நிலை | 26 |
| 33 | மரக்கதவு | 16 |
| 34 | கண்ணாடி கதவு | 37 |
| 35 | மூன்று வெளி கிறில் யன்னல் | 2 |
| 36 | மூன்று வெளி கம்பி யன்னல் | 2 |
| 37 | இரண்டு வெளி கம்பி யன்னல் | 3 |
| 38 | யன்னல் மரம் | 2 |
| 39 | யன்னல் நிலை மரம் | 8 |
| 40 | யன்னல் கதவு மரம் | 21 |
| 41 | யன்னல் கதவு மரம் | 1 |
| 42 | யன்னல் நிலை | 2 |
| 43 | யன்னல் கிறில் | 8 |
| 44 | கன்ணாடி யன்னல் கதவு சிறிது | 6 |
| 45 | கன்ணாடி யன்னல் கதவு | 22 |

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்,
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,
கிளிநொச்சி.

(C-0676)


### பாராளுமன்ற...

இதன்படி, பாராளுமன்றத்தின் 16ஆவது நிலையியற் கட்டளையின் பிரகாரம் விசேட பாராளுமன்ற அமர்விற்கு சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தனவினால் மேற்படி அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

2024, ஜூலை 02ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப 9.30 மணிக்கு இடம்பெறவுள்ள குறித்த அமர்வில் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் பங்குபற்ற வேண்டுமென சபாநாயகர் அறிவித்துள்ளார்.

இதேவேளை, பிரதமர் தினேஸ் குணவர்தன விடுத்த கோரிக்கைக்கு அமைவாகவே குறித்த விசேட ஒரு நாள் அமர்வு இடம்பெறவுள்ளதாக பாராளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ம-7,10)

### பிரபல்ய...

ஊடாக குண்டை வீசிவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,10,60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகவீன விடுமுறைப் போராட்டம்
# ஒத்துழைக்குமாறு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

சுகவீன விடுமுறைப் போராட்டத்திற்கு ஒத்துழைக்குமாறு அதிபர்கள், ஆசிரியர்களுக்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் நிர்வாகச் செயலாளர் சி. சசிதரன் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தருவதாக உறுதியளித்த வேதனத்தையாவது தருமாறு இந்த அரசிடம் கேட்கிறோம்.

நீண்டகாலமாக மாணவர்களின் நலன்களிலும், அவர்களின் கல்வியிலும் எத்தகைய பாதிப்புக்களும் ஏற்படாத வகையில் எமது அதிபர்கள், ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடன் செய்து வரும் சேவைக்கு மதிப்பளித்து, சம்பள அதிகரிப்பை வழங்குமாறு இன்று முன்னெடுக்கவுள்ள ஒருநாள் பணிப்பகிஷ்கரிப்பில் அனைவரும் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு அதிபர், ஆசிரியரினதும் தனிப்பட்ட நியாயமான கோரிக்கை. இதனை நாம் அனைவரும் ஒருமித்து, ஒன்றுபட்டு அரசிற்கு எடுத்துரைப்போம் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-6-33)

# செல்வச்சந்நிதியானின் ஆனிப் பொங்கல்



(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த ஆனிப்பொங்கல் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றது.

சந்நிதி முருகனின் வருடாந்த ஆனிப் பொங்கலை முன்னிட்டு கடந்த 17 ஆம் திகதி திங்கட்கிழமை இரவு உப்புத் தீர்த்தம் எடுத்து விளக்கு ஏற்றி விசேட வழிபாடுகள் இடம்பெற்ற நிலையில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற ஆனிப்பொங்கல் நிகழ்வில் பல அடியவர்கள் கலந்து கொண்டு பொங்கலிட்டு படைத்து வழிபட்டு இருந்தனர். (நி-6-33)

# மீனவர் பிரச்சினைக்கு தீர்வு கோரி தமிழக முதலமைச்சர் கடிதம்

(டில்லி)

“இலங்கை - இந்திய மீனவர்கள் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண வேண்டும்” என வலியுறுத்தி இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்ஷங்கருக்கு தமிழ் நாட்டின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

இலங்கை அரசாங்கத்தினால் கைது செய்யப்பட்டுள்ள தமிழ் நாட்டைச் சேர்ந்த 37 மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விரைவாக விடுவிக்க இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்த வேண்டும் என மு.க.ஸ்டாலின் ஜெய்ஷங்கருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

கடந்த 22 ஆம் திகதி இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்தைச் சேர்ந்த 22 மீனவர்கள் மூன்று படகுகளுடன் மீன்பிடிக்கச் சென்றிருந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் எனவே, இலங்கை அரசாங்கத்தால் கைது செய்யப்பட்ட மீனவர்களையும், அவர்களது படகுகளையும் உடனடியாக விடுவிக்குமாறும் வலியுறுத்தியுள்ளார்.

மேலும், ஏற்கனவே விடுவிக்கப்பட்ட படகுகளை இலங்கையில் இருந்து கொண்டு வருவதற்கு மீட்புப் படகுகள் மற்றும் பணியாளர்களுக்கு இன்னும் அனுமதி வழங்கப்படவில்லை எனவும் தமிழ் நாட்டின் முதலமைச்சர் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆகவே, மீனவர்களின் வாழ்வை சீர்குலைக்கும் இந்தப் பிரச்சினைக்கு தீர்வுகாண உடனடியாக உரிய தூதரக நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதற்காக ஏற்கெனவே அமைக்கப்பட்ட கூட்டுப் பணிக்குழுவினை மீண்டும் புதுப்பிக்க வேண்டும் எனவும் இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைக் காண இலங்கை அதிகாரிகளிடம் எடுத்துரைப்பதற்கு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு மத்திய வெளிவிவகார அமைச்சரிடம் கோரிக்கை விடுப்பதாகவும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளார். (நி-6)


## யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

**13 வருட உத்தரவாதமளிக்கப்பட்ட கல்வி வேலைத்திட்டம்**
**தொழிற்கல்விக்கான அனுமதி வழங்கல்-2024**

நீங்கள் க.பொ.த (சா/தர) பரீட்சையில் சித்தியடைந்தமை அல்லது சித்தியடையாமை பற்றி கருத்தில் கொள்ளாது க.பொ.த (உ/தர) பிரிவில் பயின்று NVQ-04 தர சான்றிதழை பெறுவதற்கு ஒரு சந்தர்ப்பம் கல்வி அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளது.

நீங்கள் 2022 (2023) மற்றும் 2024 ஆம் ஆண்டு க.பொ.த (சா/தர) பரீட்சைக்கு தோற்றியிருப்பின் 13 வருட உத்தரவாதமளிக்கப்பட்ட கல்வி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தொழிற்கல்வியினை தொடருவதற்கு அனுமதி வழங்கப்படுகின்றது. அதற்கான விண்ணப்பப்படிவம் எமது கல்லூரியின் கூட்டுறவு சங்கத்தில் 01.07.2024 முதல் பாடசாலை நேரத்தில் பெற்றுக்கொள்ள முடியும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 31.07.2024 இற்கு முன் தொழில்கற்கை பிரிவுக்கான அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட வேண்டும்.

மட்டுப்படுத்திய அனுமதியே வழங்கப்பட்டுள்ளதால் நேர்முக தேர்வின் அடிப்படையிலேயே மாணவர்கள் இக் கற்கைநெறிக்கு உள்வாங்கப்படுவார்.

**அதிபர்**
**யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி,**
**யாழ்ப்பாணம்.**

(சி-675)


# இராசிபலன்

26.06.2024
ஆனி 12, புதன்கிழமை
பஞ்சமி முன்னிரவு 11.15 மணிவரை
அவிட்டம் பிற்பகல் 3.35 மணிவரை

சுபநேரம் 4.25-5.55 மணி வரை
இராகுகாலம் 11.55-1.25 மணிவரை
உலக போதைப் பொருள் ஒழிப்பு தினம்

சந்திராஷ்டமம்-
திருவாதிரை, புனர்பூசம்

வளவன்




குடும்பத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், வருமானம் அதிகரித்து வளம் காணும் நாள், மதிப்பும் மரியாதையும் உயரும் வாய்ப்புண்டு.




சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வரத்தோன்றும், தொழில் வளர்ச்சிக்கு வித்திட்டவர்களை சந்தித்து மகிழ்வீர்கள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள்




பகை விலகி பாசம் கூடும் நாள், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காணும் நாள்.




நேசித்த ஒருவருடன் யோசித்துப் பேசும் சூழ்நிலை உருவாகும், உடல் நலனில் கவனம் தேவை, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், பிரயாண பயமுண்டு.




தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு.




தொழில் வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், கடன் பாக்கிகள் வசூலாகும் வாய்ப்புண்டு, இயல்பான வாழ்வில் கௌரவம் அந்தஸ்து உயரும் வாய்ப்புண்டு




கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், வளர்ச்சி கூடும் நாள், தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் இயல்பாக கிடைக்கும் வாய்ப்புண்டு, தாழ்ந்த சுபாவமுண்டு.




சந்தித்த நபர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் உருவாகும், வாகன சுகமுண்டு.




பாகப்பிரிவினைகள் சுமூகமாக அமையும், விருப்பங்கள் நிறைவேற வழிபாடுகளை கடைப்பிடிக்க வேண்டிய நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், பொது வாழ்வில் புகழ் கூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், வாக்கு மேன்மையுண்டு.




சான்றோர்களின் சந்திப்பால் சந்தோசமடைவீர்கள், இறைவழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், கற்பனை மிகுதியான நாள், போசன சுகமுண்டு.




ஆனந்த வாழ்வுக்கு அடித்தளம் அமைக்கும் நாள், உடன் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, சுபவிரயங்கள் கூடும் நாள்.

எந்த தாய்ப்பறவையும் இரையில்லாமல் வீடு திரும்புவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்த்தக கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கியின் ஏற்பாட்டில் எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்.கலாசார மத்திய நிலைய வளாகத்தில் வர்த்தக கண்காட்சி இடம்பெறவுள்ளது.

கற்றாழை, சலவை, தோல்சார், கைவினைப் பொருட்கள், கடல்சார் உலர் உணவு மற்றும் மட்பாண்ட போன்ற உற்பத்தி பொருட்களின் கண்காட்சி நிகழ்வு இடம் பெறும்.

குறித்த கண்காட்சி காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# சுகாதார சீர்கேடான 4 உணவகங்களுக்கு சீல்

(யாழ்ப்பாணம்)

யாழில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிவந்த நான்கு உணவகங்கள் நீதிமன்ற உத்தரவிற்கு அமைய சீல் வைத்து மூடப்பட்டுள்ளன.

யாழ்.மாநகரசபைக்குட்பட்ட வண்ணார்பண்ணை, நல்லூர் பகுதி பொது சுகாதார பரிசோதகர் பிரிவுகளில் தி. கிருபன், பு. ஆறுமுகதாசன் தலைமையிலான பொது சுகாதார பரிசோதகர் குழுவினால் கடந்த 19 ஆம் திகதி உணவு தொழிற்சாலை, உணவகங்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதன்போது சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய ஓர் உணவு தொழிற்சாலை மற்றும் மூன்று உணவகங்கள் இனங்காணப்பட்டன. குறித்த உணவு கையாளும் நிலையங்களிற்கு எதிராக மாநகர சபை பொது சுகாதார பரிசோத கர்களால் யாழ் மேலதிக நீதிவான் நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

இந்நிலையில் குறித்த வழக்குகள் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதிவான் ஏ.ஏ. ஆனந்தராஜா குறித்த உணவு கையாளும் நிலையங்கள் அனைத்தையும் குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படும் வரை சீல் வைத்து மூடுமாறு பொது சுகாதார பரிசோதகர்களிற்கு கட்டளை வழங்கினார். இதனையடுத்து மாநகர பொது சுகாதார பரிசோதகர்களால் குறித்த உணவு கையாளும் நிலையங்கள் சீல் வைத்து மூடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6-33)




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 350 | 350 | 350 | 200-300 | 280 |
| உருளைக்கிழங்கு | 180 | 220 | 200 | 190 | 200 |
| பச்சைமிளகாய் | 150 | 150 | 120 | 120-170 | 200 |
| தக்காளி | 700 | 700 | 700 | 700 | 800 |
| மரவள்ளிக்கிழங்கு | 130 | 160 | 120 | 100-130 | 200 |
| கோவா | 300 | 330 | 300 | 250 | 350 |
| கரட் | 350 | 550 | 450 | 400 | 600 |
| பூசணி | 180 | 200 | 180 | 150 | 200 |
| புடோல் | 160 | 300 | 180 | 200 | 350 |
| வாழைக்காய் | 180 | 180 | 150 | 100-170 | 200 |
| சின்ன வெங்காயம் | 400 | 450 | 250-350 | 300-580 | 400 |
| பெரிய வெங்காயம் | 250 | 250 | 220 | 250 | 260 |
| பாகற்காய் | 1200 | 1000 | 1000 | 700 | 1200 |
| வெண்டக்காய் | 240 | 300 | 200 | 250 | 350 |
| கருணைக் கிழங்கு | 200 | 200 | 150 | 150 | 200 |
| பயற்றங்காய் | 200 | 300 | 250 | 200-300 | 280 |
| லீக்ஸ் | 650 | 700 | 700 | 400 | 650 |
| பீற்றூட் | 800 | 550 | -- | 500 | 800 |
| கறிமிளகாய் | 600 | 700 | 800 | 500 | 800 |
| முருங்கைக்காய் | 1500 | 2000 | -- | 700-1000 | 1200 |
| போஞ்சி | 800 | 600 | 800 | 400 | 800 |
| கத்தரிதம்புள்ள | 300 | 300 | 300 | -- | 250 |
| கீரை - 1 பிடி | 100 | 80 | 100 | 100-120 | 80 |
| தேசிக்காய் | 1200 | 1000 | 700 | 800-1000 | 1200 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 110 | 80 | 60-100 | 80-120 |
| இராசவள்ளி | 450 | 500 | 450 | 300 | 450 |
| வெங்காயப்பூ | 300 | 350 | 500 | -- | 500 |
| முள்ளங்கி | 140 | 250 | 200 | 350 | 320 |
| பொன்னாங்காணி | 80 | 90 | 100 | 100 | 70 |
| வல்லாரை | 60 | 40 | 50 | 80 | 80 |
| ஈரப்பலா | 100 | 160 | -- | 100 | 200 |

# மகாஜனவுக்கு புதிய அதிபர்



(யாழ்ப்பாணம்)

யா/மகாஜனக் கல்லூரியின் புதிய அதிபராக இராஜரட்ணம் புஸ்பரட்ணம் நேற்று முன்தினம் கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

இவர் யா/மகாஜனக் கல்லூரியின் பழைய மாணவராவார். (நி-6-33)

# மோ.சைக்கிள் திருட்டு

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மீசாலைப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு வீட்டிற்கு முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சுப்பர் கப் மோட்டார்சைக்கிள் ஒன்று திருடப்பட்டுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தனிமையில் வசித்து வந்த முதியவர் ஒருவருடைய மோட்டார் சைக்கிளே இவ்வாறு திருடப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.(நி-6-30)

# மிக்ஸருக்குள் பொரித்த பல்லி



(யாழ்ப்பாணம்)

செல்வ சந்நிதி ஆலய சூழலில் விற்கப்பட்ட மிக்ஸருக்குள் பொரித்த நிலையில் பல்லி ஒன்று காணப்பட்டுள்ளது.

சந்நிதி ஆலயத்தில் நேற்று முன்தினம் இரவு ஆனிப் பொங்கல் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன.

இந்நிலையில் ஆலயத்திற்கு வருகை தந்த ஒருவர் ஆலய சூழலில் உள்ள இனிப்பு கடை ஒன்றில் மிக்ஸரை வாங்கிய போது அதனுள் பொரித்த நிலையில் பல்லி ஒன்று காணப்பட்டுள்ளது.

அது தொடர்பில் அப்பகுதி பொது சுகாதார பரிசோதகருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து பல்லியுடன் காணப்பட்ட மிக்ஸரை சான்று பொருளாக பெற்றுக்கொண்ட பொது சுகாதார பரிசோதகர் குறித்த இனிப்பு கடைக்கு எதிராக பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

குறித்த வழக்கு எதிர்வரும் 27ஆம் திகதி விசாரணைக்கு [illegible] ளது. (நி-6-33)

# கொமர்ஷல் வங்கியின் புதிய ஊக்குவிப்புத் திட்டங்கள்

இலங்கையில் அதிகம் பயன்படுத்தப்படும் டிஜிட்டல் தளமான கொமர்ஷல் வங்கியின் "ComBank Digital" பயன்பாட்டை மேம்படுத்துவதற்காக கொமர்ஷல் வங்கி ஆரம்பித்த அற்புதமான புதிய பிரசாரத்தின் கீழ், 300 வாடிக்கையாளர்களின் மின்சாரக் கட்டணங்கள் வங்கியினால் மீள வழங்கப்படுவதுடன் மூன்று வாடிக்கையாளர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்கள் ஒவ்வொருவரும் இரண்டு சிங்கப்பூர் பயணப் பொதியை வெல்லவுள்ளனர்.

இந்த பெறுமதிமிக்க பரிசில்கள் இரண்டு ஊக்குவிப்பு திட்டங்களின் கீழ் வழங்கப்படும் என்று வங்கி அறிவித்துள்ளது. இதற்கிணங்க "கொடுப்பனவை செலுத்தி வெல்லுங்கள்" (Pay and Win) மற்றும் "பரிவர்த்தனை செய்து வெல்லுங்கள்" (Transact and Win) ஆகிய இரு ஊக்குவிப்பு திட்டங்களும் ஓகஸ்ட் 2024 இறுதி வரை நடைமுறையில் உள்ளதுடன் மேலும் இவை தற்போதுள்ள ComBank Digital இனை பயன்படுத்தும் அனைத்து பயனர்களுக்கும் தகுதி பெற்ற புதிய பதிவுதாரர்களுக்கும் திறந்திருக்கும்.

"கொடுப்பனவை செலுத்தி வெல்லுங்கள்" (Pay and Win) ஊக்குவிப்பு திட்டத்தின் கீழ் ஜூன், ஜூலை மற்றும் ஓகஸ்ட் மாதங்களில் ComBank Digital மூலம் மின்கட்டணத்தைச் செலுத்தும் 300 வாடிக்கையாளர்களுக்கு 10,000 ரூபாய் வரை பணம் மீள வழங்கப்படும்.

ஒரே நேரத்தில் இயங்கும், "பரிவர்த்தனை செய்து வெல்லுங்கள்" (Transact and Win) ஊக்குவிப்பு திட்டமானது, ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட பரிவர்த்தனைகளைச் செய்யும் வாடிக்கையாளர்களுக்கானதாகும். இது தொடர்ச்சியாக மூன்று மாதங்களுக்கு மாதத்திற்கு மூன்று பயன்பாட்டு கட்டணங்களை செலுத்துதலை உள்ளடக்குகிறது. இவர்கள் சீட்டிழுப்புக்கு உள்ளாக்கப்பட்டு அதில் மூன்று அதிர்ஷ்டசாலி வெற்றியாளர்கள் 6 சிங்கப்பூர் சுற்றுப்பயணத்துக்கு தெரிவு செய்யப்படுவர்.

"ComBank Digital" ஆனது ஏற்கனவே ஒவ்வொரு மாதமும் சராசரியாக 4 மில்லியனுக்கும் அதிகமான பரிவர்த்தனைகளை செயல்படுத்துகிறது, இந்நிலையில் இந்த எண்ணிக்கையை ஊக்குவிப்பதுடன் மேலும் அதிகரிப்பதே எங்கள் நோக்கம்" என்று கொமர்ஷல் வங்கியின் டிஜிட்டல் வங்கியியல் உதவி பொது முகாமையாளர் பிரதீப் பந்துவன்ச தெரிவித்தார். "இந்தப் பிரசாரம் ComBank Digital இன் பரந்த பயன்பாட்டைத் தூண்டுவதுடன், மேலும் அதிகமான மக்கள் உற்சாகமான பரிசில்கள் மற்றும் பணம் மீளப் பெறலை (கேஷ்பேக்குகளை) வெல்வதற்கான அதிக நன்மைகளுடன் அதன் செயல்பாடு மற்றும் வசதியை அனுபவிக்க உதவுகிறது.

புதிய வாடிக்கையாளர்கள் ComBank Digital இல் முதல் வருட வருடாந்தக் கட்டணம் மற்றும் இணைவதற்கான கட்டணம் இல்லாமல் பதிவு செய்து அதன் சௌகரியம், புதிய அம்சங்கள், இயங்குதளத்தின் பயனர்களுக்கு எதிர்காலத்தில் திட்டமிடப்பட்டுள்ள நன்மைகள் மற்றும் சலுகைகளை அனுபவிக்கலாம் என வங்கி தெரிவித்துள்ளது.

கொமர்ஷல் வங்கி இலங்கையின் மிகப் பெரிய தனியார் துறை வங்கி மற்றும் உலகின் சிறந்த 1000 வங்கிகளில் பட்டியலிடப்பட்ட முதல் இலங்கையின் வங்கியாகும். கொமர்ஷல் வங்கி திறன்மிகு முறையில் அமையப்பெற்ற கிளை வலையமைப்புக்கள் மற்றும் 966 தானியங்கி இயந்திரங்களை கொண்டு இயங்குகின்றது. கொமர்ஷல் வங்கி இலங்கையின் சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகத்துறைக்கு பாரிய கடனுதவி வழங்குவதோடு நாட்டின் வங்கித் துறையில் டிஜிட்டல் புத்தாக்கங்களில் முன்னணியில் உள்ளது. வங்கியின் வெளிநாட்டு செயற்பாடுகள் பங்களாதேஷை உள்ளடக்கியது, அங்கு வங்கி 20 கிளைகளை இயக்குகின்றது. மியன்மார் நய்பியிதாவில் நுண் நிதி நிறுவனத்தினை கொண்டுள்ளது.



யாழ்.கந்தர்மடம் அரசடி வீதி செல்வ நாகபூசணி அம்பாள் தேவஸ்தான கப்பல் திருவிழா கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 150 மில்லியன் அமெரிக்க டொலர்கள் உலகவங்கி நிதியுதவி

(வோஷிங்டன்)

இலங்கைக்கு 150 மில்லியன் டொலர்களை நிதியுதவியாக வழங்க உலகவங்கியின் நிறைவேற்றுப் பணிப்பாளர் சபை அனுமதி வழங்கியுள்ளது.

இலங்கைக்கான ஆரம்ப சுகாதார சேவைகளின் தரம் மற்றும் பயன்பாட்டை மேம்படுத்துவதற்காக இந்த நிதியுதவி வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# இணையம் ஊடாக மோசடி 30 வெளிநாட்டவர்கள் கைது

(கொழும்பு)

இணையம் ஊடாக நிதி மோசடியில் ஈடுபட்டதாகக் கூறப்படும் 30 வெளிநாட்டவர்கள் நீர் கொழும்பு கொச்சிக் கடை பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொச்சிக்கடை - பல்லம்சேன மற்றும் பலகதுரே ஆகிய பிரதேசங்களில் உள்ள இரண்டு விருந்தகங்களில் தங்கியிருந்து இந்த நிதி மோசடி முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்போது நிதி மோசடிக்காக பயன்படுத்தப்பட்ட 10 கணனிகளை பொலிஸார் பொறுப்பேற்றுள்ளனர்.

கைது செய்யப்பட்ட வெளிநாட்டவர்கள் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளனர். (நி-6)

# ரணிலுடன் கைகோர்க்கவுள்ள சம்பிக்க,பொன்சேகா, ராஜித

## கொழும்பு அரசியலில் பரபரப்பு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களான பாட்டலி சம்பிக்க ரணவக்க, சரத் பொன்சேகா, ராஜித சேனாரத்ன உள்ளிட்ட பல உறுப்பினர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து கொள்ளத் தயாராக இருப்பதாக கொழும்பு ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

அண்மையில், ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன ஒரு பொது நிகழ்வில் ஜனாதிபதியுடன் நெருக்கமான உரையாடலில் ஈடுபட்டதுடன் தற்போதைய அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு பாராட்டு தெரிவித்தார்.

மேலும், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசவை அண்மையில் பாராளுமன்றத்தில் மறைமுகமாக விமர்சித்ததை தொடர்ந்து கட்சி உறுப்பினர்களின் விமர்சனங்களை எதிர்கொண்ட சரத் பொன்சேகா ரணிலுக்கு ஆதரவாக சாய்வதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், தற்போதைய அரசாங்கத்தின் முன் முயற்சிகளுக்கு நடுநிலையான நிலைப்பாட்டை கடைப்பிடித்து வரும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவும் ஜனாதிபதியுடன் இணைந்து கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த அரசியல்வாதிகள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் கைகோர்க்க எதிர்பார்க்கும் உத்தியோக பூர்வ விழா இந்த வார இறுதியில் நடைபெறவுள்ளது.

இதனிடையே அடுத்து வரும் வாரங்களில் அமைச்சரவை மாற்றம் தொடர்பில் கொழும்பு அரசியல் வட்டாரத்தில் பேச்சடிபடுவதாகவும் அந்த ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது. (நி-6)


புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்(வ-து) ஒட்டுசுட்டான் வீதி, புதுக்குடியிருப்பு

Reg.No:Mu-191 Reg T.P-076 035 0322

உறுப்புரிமை பெற்ற சகல அங்கத்தவர்களுக்கும் !

**பொதுக்கூட்ட அழைப்பு**

மேற்படி எமது புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச்சங்கத்தின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் 03/07/2024 புதன்கிழமை மு.ப 11.00 மணிக்கு எமது அலுவலக மண்டபத்தில் தலைவர் றா.செபஸ்ரியாம்பிள்ளை அவர்களது தலைமையில் நடைபெறவிருப்பதால் அங்கத்துவம் பெற்ற அனைவரையும் குறித்த நேரத்தில் வருகை தருமாறு அன்பாக கேட்டுக்கொள்கின்றேன்.

**நிகழ்ச்சி நிரல்**

1. மங்கள விளக்கேற்றல்
2. அகவணக்கம்
3. வரவேற்புரை
4. தலைமையுரை
5. சென்ற பொதுக்கூட்ட அறிக்கை சமர்ப்பித்தல்
6. கணக்காய்வு அறிக்கை 2022 சமர்ப்பித்தல்
7. சங்கமட்ட கணக்கறிக்கை சமர்ப்பித்தல் (2023)
8. 2024 ஆம் ஆண்டுக்கான அபிவிருத்திக்கான வேலைத்திட்டம்
9. 2024 ஆம் ஆண்டுக்கான உச்ச கடன் எல்லை தீர்மானித்தல்
10. உத்தேச 2024 ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்ட அறிக்கை சமர்ப்பித்தல்
11. 5000/= மேற்பட்ட செலவீனங்கள் சமர்ப்பித்தல்
12. கணனிக் கொள்வனவு தொடர்பாக ஆராய்தல்
13. தளபாடக் கொள்வனவு தொடர்பாக ஆராய்தல்
14. விருந்தினர் உரை
15. கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் உரை
16. புதிய நிர்வாகத்தெரிவு
17. செயலாளர் நன்றியுரை

(சி-674)

செயலாளர்,
புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவு கால்நடை வளர்ப்போர்
கூட்டுறவுச் சங்கம்(வ-து) ஒட்டுசுட்டான் வீதி, புதுக்குடியிருப்பு



லங்கா மஹறால் (PVT) LTD

DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

(1328)

இந்தியாவில இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
00919566156719

WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
077 839 3974



கேள்வி கோரல்-2024
யா/வட்டு இந்துக் கல்லூரி-சிற்றுண்டிச்சாலை

யா/வட்டு இந்துக் கல்லூரியின் சிற்றுண்டிச்சாலையை 2024 ஆம் ஆண்டு ஆவணி மாதத்திலிருந்து ஒரு வருட காலத்திற்கு மாதாந்த வாடகை அடிப்படையில் நடாத்துவதற்குப் பொருத்தமான ஒப்பந்தகாரரைத் தெரிவு செய்வதற்கான கேள்வி கோரல்கள் வரவேற்கப்படுகின்றன.

கேள்வி கோரல்களுக்கான விண்ணப்பப்படிவத்தை மீளளிக்கப்படாத செலுத்துகையான ரூபா 1000 ஐ 26.06.2024 ஆம் திகதி முதல் 15.07.2024 ஆம் திகதி வரை முற்பகல் 8.00 மணிக்கும் பிற்பகல் 1.00 மணிக்கும் இடையில் கல்லூரி அலுவலகத்தில் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்த விண்ணப்பப் படிவத்தை தகைமை, அனுபவ நற்சான்றிதழ்களுடன், பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ தலைவர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், யா/வட்டு இந்துக் கல்லூரி, சித்தன்கேணி என்ற முகவரியில் 15.07.2024 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்பாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "சிற்றுண்டிச்சாலை நிர்வகிப்பதற்கான கேள்வி கோரல் -2024 "எனக் குறிப்பிடப்படவேண்டும். கிடைத்த கேள்விகோரல்கள் யாவும் 24.07.2024 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்குத் திறக்கப்பட்டு தகுதியானவர் தெரிவு செய்யப்படுவார்.

**பிற்குறிப்பு:**

முற்று முழுதாகத் தரமான, ஆரோக்கிய உணவு வகைகளை வழங்க முன்வரும் ஒப்பந்தக்காரருக்கு எமது கட்டணத்தில் பொருத்தமான விலக்கு அளிக்கப்படும்.
2015.12.31 திகதியிடப்பட்ட 35/2015 சுற்று நிருபத்திற்கு அமைவாக நடைமுறைகள் மேற்கொள்ளப்படும்.

(1332)

தலைவர்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யா/வட்டு இந்துக் கல்லூரி, சித்தன்கேணி.
021 225 0036



கல்யாணமாலை
சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>12 இல் செவ்<br>உயரம்:5'9"<br>தகைமை/தொழில்: Technical Officer<br>எதிர்பார்ப்பு: அரச/தனியார் தொழில் விரும்பத்தக்கது<br>தொ.இ: B/11469 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 17 1/4 7 இல் செவ்<br>உயரம்:5'2"<br>தகைமை/தொழில்: BSMS பட்டதாரி<br>எதிர்பார்ப்பு: அரச/தனியார் உத்தியோகம்,வெளிநாடு<br>தொ.இ: G/13588 |
| பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 72 1 இல் செவ்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: Bsc பட்டதாரி. Quantity Surverying<br>எதிர்பார்ப்பு-பட்டதாரி.QS. Civil Engineer<br>தொ.இ: B/12850 | பிறப்பு- 1996 இந்து<br>நட்சத்திரம்: அனுஷம்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: Bsc,Unior Excutive<br>எதிர்பார்ப்பு: Doctor,Engineer, Accountant, Lecturer<br>தொ.இ: G/13874 |
| பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 31<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: Bsc பட்டதாரி. சுங்கப்பரிசோதகர்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி பெண்<br>தொ.இ: B/12240 | பிறப்பு- 1995 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 59 1 இல் செவ்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: MLS<br>எதிர்பார்ப்பு: Doctor,Engineer<br>தொ.இ: G/14271 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## பிரான்சில் உள்நாட்டுப் போர் வெடிக்கும் அபாயம்

### ஜனாதிபதி மக்ரோன் எச்சரிக்கை



(பாரிஸ்)
பிரான்ஸில் உள்நாட்டு யுத்தம் வெடிக்கும் அபாயம் காணப்படுவதாக அந்நாட்டின் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் எச்சரித்துள்ளார்.

பிரான்சில் எதிர்வரும் 30 ஆம் திகதி தொடக்கம் ஜூலை மாதம் 7 ஆம் திகதி வரை பாராளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது.

குறித்த தேர்தலில் அந்நாட்டின் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் தலைமையிலான நேஷனல் ரேலி கட்சிக்கும், இடது சாரியான நியூ பாப்புலர் முன்னணி கூட்டணிக்கும் இடையில் தீவிர போட்டி நிலவி வருகின்றது.

இந்நிலையில் தேர்தலை முன்னிட்டு நேற்றைய தினம் இடம்பெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் உரையாற்றிய மக்ரோன் குறித்த இரு கட்சிகளுக்கும் இடையே காணப்படும் தேர்தல் போட்டியானது உள்நாட்டுப் போர் ஏற்படுவதற்கு வழிவகுக்கும் எனத் தெரிவித்திருந்தார்.

இதேவேளை வலதுசாரிகளுக்கே பெரும்பான்மை கிடைக்கும் என்று தேர்தலுக்கு முந்திய கருத்துக் கணிப்புகளில் கூறப்பட்ட நிலையில் வலதுசாரிகளுக்கு எதிராக ஆயிரக்கணக்கான பெண்கள் நேற்று முன்தினம் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி-6)

## பிரித்தானிய இளவரசி ஆன் வைத்தியசாலையில் அனுமதி

(லண்டன்)
பிரித்தானிய இளவரசி ஆன், சிறு காயம் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என பக்கிங்ஹாம் அரண்மனை நேற்று முன்தினம் திங்கட்கிழமை அறிவித்துள்ளது.

73 வயதான இளவரசி ஆன், மன்னர் 3 ஆம் சார்ள்ஸின் இளைய சகோதரி ஆவார்.



தனது கேட்கோம் பார்க் எஸ்டேட்டில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற சம்பவமொன்றில் அவர் காயமடைந்தார் எனவும், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பிரிஸ்டல் நகரிலுள்ள சௌத்மேட் மருத்துவமனையில் அவர் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனவும் பக்கிங்ஹாம் அரண்மனை தெரிவித்துள்ளது.

இளவரசி ஆன் எவ்வாறு காயமடைந்தார் என்பது உறுதிப்படுத்தப்படவில்லை. எனினும், குதிரை தொடர்பானது என சந்தேகிக்கப்படும் சம்பவமொன்றினால் இளவரசி ஆனின் தலையில் சிறு காயமும் ஏற்பட்டுள்ளதாக பிரித்தானிய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

அவருக்கு ஏற்பட்ட காயமானது குதிரையின் தலை அல்லது காலின் தாக்கத்தினால் ஏற்படக்கூடிய காயத்தை ஒத்திருப்பதாக பிபிசி தெரிவித்துள்ளது.

இளவரசி இவ்வார இறுதியில் கனடாவுக்கு பயணம் செய்யவிருந்தார். தற்போது அவ்விஜயம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இளவரசி ஆன், குதிரையோட்டத்தில் தேர்ச்சி பெற்றவர். மன்னர் சார்ள்ஸின் முடிசூட்டு விழாவிலும் அவர் குதிரையில் வந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## லெபனானின் ஹிஸ்புல்லாவை எதிர்கொள்ள படைகளை நகர்த்தும் இஸ்ரேல்



(காசா)
காசாவில் ஹமாஸ் அமைப்புடனான போரின் தற்போதைய கட்டம் முடிவிற்கு வருவதாகவும் அடுத்து லெபனானின் ஹிஸ்புல்லா அமைப்பை எதிர்கொள்வதற்காக இஸ்ரேல் தனது வடபகுதி எல்லைக்கு மேலும் படையினரை அனுப்பவுள்ளதாகவும் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அதன்படி, ரஃபாவில் தனது நடவடிக்கையை பூர்த்தி செய்யும் நிலையில் இஸ்ரேல் இராணுவம் உள்ளதாகவும் எனினும் அதன் அர்த்தம் காசா யுத்தம் முடிவிற்கு வந்துவிட்டது என்பதல்ல எனவும் இஸ்ரேல் பிரதமர் தெரிவித்துள்ளார்.

எனினும் எதிர்காலத்தில் காசாவில் தற்போது நிலை கொண்டுள்ளதை விட குறைந்தளவு படையினரே தேவைப்படுவதாகவும் அங்கிருந்து படையினரை விலக்கி அவர்களை ஹிஸ்புல்லா அமைப்பிற்கு எதி ரான நடவடிக்கைகளிற்கு பயன்படுத்தவுள்ளதாகவும் இஸ்ரேல் பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதற்கமைய, வடபகுதி எல்லைக்கு எங்கள் படையினரை மாற்றுவதற்கான சந்தர்ப்பம் கிடைக்கும் எனவும் எனினும் தற்பாது காப்பே மிக முக்கியமானது எனவும் தெரிவித்துள்ளார்.

ஹிஸ்புல்லா அமைப்பும் இஸ்ரேலும் மற்றொரு யுத்தத்தை நோக்கி நகர்கின்ற நிலையில் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யா குவின் இந்தக் கருத்துக்கள் பதற்றத்தை மேலும் அதிகரித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (நி-6)

## காசா போ...

### காணா...

(காசா) —
காசா போரின்
காணாமல் போயு
தாகவும் சிறுவர்
அறிக்கையில் தெ

கடந்த ஆண்டு ஒக்டோபர் 7 ஆம் திகதி ஹமாஸ் உறுப்பினர்கள் இஸ்ரேலுக்குள் நுழைந்து தொடர் தாக்குதல்களுக்குப் பிறகு, இஸ்ரேல் காசா பகுதி மீது தாக்குதல் நடத்தத் தொடங்கியது.

அந்த
500 இ
மக்கள்
அவர்கள்
குழந்தை
ள்ளது.

## விடுதலையானார் ஜூலி...



(லண்டன்)
விக்கிலீக்ஸின் ஸ்தாபகர் ஜூலியன் அசாஞ்சே 5 ஆண்டுகளுக்குப் பின்னர் பிரித்தானியச் சிறைச்சாலையில் இருந்து விடுத...
அ
கொள
யின்
அசா

## 100 இற்கும் மேற்பட்ட பத்திரி...

### காசாவில் உயி...

(காசா)
பாலஸ்தீன பத்திரிகையாளர்கள் 100 இற்கும் மேற்பட்டோர் காசாவில் நிகழும் போரில் கொல்லப்பட்டிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

காசாவில் 13 செய்தி நிறுவனங்களைச் சேர்ந்த சுமார் 50 பத்திரிகையாளர்கள் அடங்கிய குழு, களத்திற்குச் சென்று 4 மாதங்களாக மேற்கொண்ட விரிவான விசாரணையில் மேற்கண்ட தகவல் வெளியாகியுள்ளது.

'பத்திரிகை' என்ற அடையாள அட்டை அணிந்திருந்தும் அவர்கள் மீது கண்



மூடித்தனமாக தாக்குதல்
நடத்தப்பட்டிருப்பதும் தெரிய
வந்துள்ளது.

இதையடுத்து, பத்திரிகை
சுதந்திரம் மீதான வெளிப்ப
டையான தாக்குதல் இது
என பத்திரிகையாளர்கள்
பலர் கண்டனம் தெரிவித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ் போரில் 21,000 குழந்தைகள்
# ாமல் போயுள்ளதாக தகவல்

**ாரின் போது 21,000 பாலஸ்தீன குழந்தைகள் போயுள்ளதாகவும் 4,000 குழந்தைகள் இறந்துள்ள றுவர் பாதுகாப்பு நிதியம் வெளியிட்டுள்ள சமீபத்திய ில் தெரியவந்துள்ளது.**



அந்தத் தாக்குதல்களில் 37, 500 இற்கும் மேற்பட்ட காசா மக்கள் கொல்லப்பட்டுள்ளனர், அவர்களில் பெரும்பாலானோர் குழந்தைகள் எனத் தெரியவந்துள்ளது.

யுத்தத்தின் போது இழந்த பிள்ளைகளை அவர்களது பெற்றோருடன் ஒன்றிணைப்பதற்கு சாத்தியமான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் என அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ள போதிலும், அதிகரித்து வரும் மோதல்கள் காரணமாக இந்த நிலைமை கடினமானதாக மாறியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தவிர, இஸ்ரேல் இராணுவத்தால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட குழந்தைகளும் கணிசமான அளவில் இருப்பதாகவும் அந்த அறிக்கை மேலும் குறிப்பிட்டுள்ளது. (நி-6)

## ர் ஜூலியன் அசாஞ்சே



விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

அமெரிக்காவுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் அடிப்படையில் ஜூலியன் அசாஞ்சே மீதான குற்றச்சாட்டுகளில் இருந்து அவர் விடுவிக்கப்பட்டுள்ளதாக சர்வ தேச ஊடகங்கள் தெரிவித்துள் ளன.

விக்கிலீக்ஸ் இணையத் தளம் மூலம் அமெரிக்க இரகசிய ஆவணங்களை வெளியிட்டமை காரணமாக, விக்கிலீக்ஸ் இணைய தளத்தின் ஸ்தாபகர் ஜூலியன் அசாஞ்சே மீது அமெரிக்க நீதித்துறை 18 குற்றச் சாட்டுகளை பதிவு செய்தது.

அதன்படி, அவர் 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11 ஆம் திகதியன்று கைது செய்யப்பட்டு லண்டனில் உள்ள அதியுயர் பாதுகாப்பு சிறைச்சாலையான பெல்மார்ஷ் சிறைச்சாலையில் சிறை வைக்கப்பட்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி-6)

## வரலாற்றில் முதன்முறையாக குவைத்தில் மின்வெட்டு



(குவைத்)

வரலாற்றில் முதன் முறையாக, அதிக வெப்ப நிலை காரணமாக மின்வெட்டை நடைமுறைபடுத்த குவைத் அரசு தீர்மானித்துள்ளது.

அதன்படி, நாள் ஒன்றுக்கு இரண்டு மணி நேரம் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் வைத்திய சாலைகள் மற்றும் இரத்த வங்கிகளுக்கு இந்த மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மின்சாரம், நீர் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம், மின்சார விநியோகத்தை மிகவும் திறம்பட நிர்வகிப்பதற்காக, வெப்பமான நாளின் போது இந்த தற்காலிக மின்வெட்டு இருக்கும் என்று தெரிவித்துள்ளது.

குவைத்தின் சில பகுதிகளில் சுமார் 50 பாகை செல்சியஸ் அளவில் வெப்பம் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## த்திரிகையாளர்கள்
## யிரிழப்பு



...குதல் ...தெரிய ...ரிகை ...ளிப்ப ... இது ...ர்கள் ...ரிவித்துள்ளனர். பத்திரிகையாளர்கள் மீதான தாக்குதல் குறித்து விளக்கமளித்துள்ள இஸ்ரேல் இராணுவம், பத்திரிகையாளர்களை தாக்கவேண்டும் என்கிற முனைப்புடன் தங்கள் நாட்டு இராணுவம் செயற்படவில்லை என்றும், ஹமாஸ் படைகள் இருப்பிடங்களைக் குறிவைத்து நடத்தப்பட்டுள்ள வான்வழித் தாக்குதல்களில் அவர்கள் பாதிக்கப்பட்டிருக்கக் கூடுமெனவும் தெரிவித்துள்ளது.

தீவிரமடையும் போரால், பாலஸ்தீனத்தில் 200 இற்கும் மேற்பட்ட பத்திரிகையாளர்கள் தங்கள் இருப்பிடங்களை விட்டு இடம்பெயர்ந்துள்ளனர்.

அது மட்டுமன்றி அவர்களின் குடும்பத்தினர் பலரும் இந்தச் சண்டையில் கொல்லப்பட்டதாகவும் தெரிவித்துள்ளனர். கள ஆய்வில், இஸ்ரேல் இராணுவம் பத்திரிகையாளர்கள் மீது தாக்குதல் நடத்தியிருப்பதை உறுதி செய்ய முடிந்ததாகவும் ஒரு சில ஊடக நிறுவனங்கள் தெரிவித்துள்ளன. (நி-6)

## பட்டரி தொழிற்சாலையில் தீ விபத்து தென்கொரியாவில் 16 பேர் உயிரிழப்பு



(சியோல்)

தென் கொரியாவில் உள்ள லித்தியம் தயாரிக்கும் தொழிற்சாலையொன்றில் நேற்று முன்தினம் ஏற்பட்ட தீ விபத்தில் 16 பேர் உயிரிழந்துள்ளனர்.

அந்நாட்டின் தலைநகரான சியோலுக்கு தெற்கே உள்ள ஹ்வாசோங் நகரில் உள்ள தொழிற்சாலையொன்றிலேயே குறித்த தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இவ்விபத்தில் 16 பேர் உயிரிழந்துள்ள நிலையில் 7 பேர் காயமடைந்துள்ளதாகவும் 5 பேர் காணாமல்போயுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இவ்விபத்து தொடர்பான தீவிர விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பறவைக்காய்ச்சலின் மிரட்டலும் நீரிழிவு மருந்தின் பொய்மையும்!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை.

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

எதற்கும் நாம் அலட்சியமாக இருந்தே பழகிவிட்டோம். எல்லாம் வந்த பிறகு பார்க்கலாம் என தள்ளிப் போடுவது உயிராபத்தையும் ஏற்படுத்திவிடும். அனைத்திற்கும் நேரக் கணக்கு உண்டு.

முளையிலேயே கிள்ளி யெறியவேண்டும் என்பதில் பல அர்த்தங்கள் உண்டு. இங்கே இதற்கு கனதியான அர்த்தம் உண்டு. இணைய வழித் தகவல்கள் என்றாலும் பலருக்கு இவ்வாறான தகவல்களை வாசித்தறியவும் அவர்களையும் அவரது உறவுகளையும் பாதுகாப்பதும் தலையாய கடமை என யோசித்துக் கொண்டால் இதில் பரிமாறப்படும் தகவல்கள் பலரது உயிர்களை காப்பாற்ற உதவிடும்.

உடற்சுகாதாரம் என்பதால் இதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. உலக நடப்புக்களை அறியும் போது நாம் கொவிட் 19 இல் பெற்ற அனுபவம் புதிய நோய்கள் உருவாகும் இந்நோய் தொற்றியிருக்கின்ற செய்தி மிகவும் ஆச்சரியமானதாகவும் பலத்த ஆபத்தையும் உருவாக்கியிருக்கின்றது.

கால்நடைகளுக்கு தொற்றுதலானால் அவற்றிலிருந்து பெறப்படும் உணவுகளில் குறிப்பாக பால் மற்றும் இறைச்சி என்பனவற்றில் இந்த தொற்று இருப்பதற்கான வாய்ப்புக்கள் அதிகமே. இதனால் வெறுமனே பசும்பாலை (raw milk) அருந்த வேண்டாம் என மக்களை அறிவுறுத்தப்பட்டிருக்கின்றார்கள்.

தற்போது வரை எமது நாட்டில் பயப்படுமளவுக்கு எதுவுமில்லை என்னும் ஆறுதல் செய்தி வந்து கொண்டிருப்பது ஒரு வகையில் மனதிற்கு நிம்மதியைத் தந்தாலும் அது நிரந்தரமாக இருக்குமோ என்னும் வினாவும் உடனுண்டு. கொவிட் 19 இல் பாதிப்பேற்படாது என துணிந்து நடந்து திரிந்தவர் நோயெதிர்ப்பு சக்தி குறைந்து இறந்துவிட்டார்.

எமது உடல் உணவு பழக்கவழக்கங்கள் அனைத்தும் இதில் மிக முக்கியமானது.

பட்டுள்ளது. பல நாடுகளில் மேற்படி மருந்துகள் தடைசெய்யப்பட்டுள்ளது. இன்சுலின் சுரப்பின் தொழிற்பாடு நலிவடைந்தவர்களுக்கு பயன்படுத்தும் இவ்வகை மருந்துகள் பாவனையை தடுத்துள்ளமை மக்களுக்கு அவசியம் தெரியப்படுத்துதல் அவசியமாகும்.

நோயெதிரிகளாக பயன்படுத்தப்படும் அன்ரிபயோடிக்குகளின் பயன்பாட்டினையும் மருத்துவர்களின் சிபார்சு இன்றி பயன்படுத்த வேண்டாம் எனவும் அறிவுறுத்தப்பட்டிருக்கின்றது. ஒரே வகையில் பலவகை மருந்




போது எம்மையும் அறியாமலேயே அதைப்பற்றி தெரிந்து கொள்ளவும் அதிலிருந்து நாம் எங்களை எப்படி காப்பாற்றிக் கொள்ளலாம் என்னும் தேவையும் விரைந்தெழுந்துவிடும். எமது உயிர் மேல் எவ்வளவுக்கு அக்கறையோ அதுபோல மற்றையவர் உயிரிலும் நாம் அக்கறை கொள்ள வேண்டும்.

உலக மக்களை மீண்டும் உலுக்கிக் கொண்டிருக்கிறது பறவைக் காய்ச்சல் என்னும் தொற்று நோய். ஏச்9என்1 (H9N1) என்னும் குறியீட்டுடன் பரவும் இவ் வைரஸ் நோய் தற்போது பலநாடுகளில் கால்பதித்து விட்டது. வளர்ந்த நாடுகளில் குறிப்பாக அமெரிக்காவில் பறவைகளைத் தாண்டி கால்நடைகளையும் குறிப்பாக கறவைப் பசுக்களையும்

நீரிழிவு நோயிற்கான மருந்தாக பரிந்துரைக்கப்பட்டிருக்கும் செமகுளூட்டைட் (Semaglutide) என்னும் ஒசீம்பிக் (Ozempic) மருந்து நீரிழிவு வகை இரண்டில் உள்ள நோயாளிகள் இன்சுலின் சுரப்புக்காக பயன்படுத்தும் ஊசி மருந்தாகும். இது கிழமைக்கொரு தடவை பயன்படுத்த சிபார்சு செய்யப்பட்டது.

ஆனால் தற்போது உலக சுகாதாரதாபனம் இவ்வாறான மருந்தினை பயன்படுத்த வேண்டாம் என பரிந்துரைக்கின்றது.

பொதுவாக இவ் வகை மருந்தின் பாவனையிலுள்ளவர்கள் இம்மருந்தினை தவிர்க்கும்படி அறிவுறுத்தப்பட்டிருக்கின்றனர். செமகுளூட்டைட் மருந்தின் தரத்தில் குறைபாடுகள் காணப்படுகின்றமையால் இதனது பயன்பாடு மட்டுப்படுத்[illegible]

துகள் வெவ்வேறு பெயர்களில் விற்பனைக்கு வந்திருப்பதனாலும் அவற்றின் தொழிற்பாடுகள் எதிர்பார்த்தளவில் இல்லாத காரணத்தினாலும் சிறந்த நோயெதிர்ப்பு சக்தியுடைய அன்ரிபயோடிக்குகளை மருத்துவரின் சிபார்சுவுடன் பயன்படுத்தல் வேண்டும். பரவிவரும் தொற்று நோய்களுக்காக பயன்படுத்தப்படும் இவ்வகை மருந்துகளின் பாவனை சரியாக பரிந்துரைக்கப்பட்ட அளவின் அடிப்படையில் பயன்படுத்தல் வேண்டும்.

உடல் சுகாதாரத்திற்காக பயன்படுத்தப்படும் மருந்துகளின் தவறான பயன்பாட்டினால் பல்வேறு விளைவுகள் ஏற்பட வாய்ப்புண்டு என்பதனால் இதுபற்றி செய்திகளை மற்றையவர்களுக்கும் தெரியப்படுத்து [illegible]

# இன்று ஒரு தகவல் 164



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## புகழ் மயக்கம்

புகழுக்கு மயங்காதவர்கள் யாரு இந்த உலகத்திலே! ஒருவரை பார்த்து இன்னொருவர் சொன்னார். சார்! இந்த அகில உலகத்திலேயும் புகழுக்கு மயங்காதவர் நீங்கள் ஒருவர் தான் சார்! என்றார். இதைக் கேட்டதும் அவர் அப்படியா? ரொம்ப ரொம்ப நன்றி என்று சொல்லி அசடு வழிந்தார். அப்படி என்றால் என்ன அர்த்தம்? அதுக்கே அவர் மயங்கி விட்டார் என்று அர்த்தம்! இரண்டு பேர் பேசிக் கொண்டிருந்தார்கள். அந்த இரண்டு பேரில் ஒருவரிடம் பணம் அதிகமாக இருந்தது.

இன்னொருவரிடம் அறிவு அதிகமாக இருந்தது. இது இரண்டும் ஒரே இடத்திலே இருப்பது தான் அபூர்வமாச்சே! பணம் அதிகமாக வைத்திருப்பவருக்கு ஒரு ஆசை! யாராவது நம்மை புகழ மாட்டார்களா என்று! பக்கத்திலே இருக்கிற அறிவாளி ஒரு ஏழை. பார்த்தார் அவர். சரி இவரிடம் காசு கொடுத்தாவது தம்மை புகழ வைப்போம் என நினைத்தார். அந்த ஏழையைப் பார்த்துச் சொன்னார் இதோ பார் என்னிடம் ஆயிரம் பொற்காசுகள் இருக்கு. அதிலே ஒரு நுறு பொற்காசுகளை உன்னிடம் தருகின்றேன். நீ கொஞ்சம் என்னை புகழ்ந்து பேச வேண்டும் செய்வாயா என்று கேட்டார்.

இது நேர்மையான பங்கீடு இல்லை நீங்கள் பங்கு போடுவதில் நேர்மை இல்லாததனால் நான் உங்களை புகழ்ந்து பேச மாட்டேன் என்றார் அவர்.அப்படியா சொல்லுகிறாய் சரி அப்படி என்றால் ஆளுக்கு பாதியாக எடுத்துக் கொள்வோம் என்னிடம் இருப்பது 1000 இதிலே உனக்கு 500 எனக்கு 500 இப்படி பிரித்துக் கொள்வோம். இப்போதாவது கொஞ்சம் என்னை புகழ்ந்து பேசுவாயா என்று கேட்டார்.

இவர் பார்த்தார். என்னிடம் 500 உங்களிடம் 500 இருந்தால் நாம் இரண்டு பேரும் சமம் என்று தானே அர்த்தம்.அப்படியிருக்கும் போது எனக்கு சமமாக பணம் வைத்திருக்கிற உங்களை நான் எப்படி புகழ்ந்து பேச முடியும்? என்றார்.சரி நான் வைத்திருக்கிற அனைத்தையும் உன்னிடம் கொடுத்துவிட்டால் அப்போதாவது என்னை புகழ்ந்து பேசு வாயா என்று கேட்டார் அவர்.

நீங்கள் உங்களிடம் இருக்கிற எல்லாவற்றையும் கொடுத்துவிட்டால் நான் செல்வந்தன் ஆகிவிடுவேன். நீங்கள் ஏழை ஆகிவிடுவீர்கள். செல்வந்தனான நான் ஒன்றுமே இல்லாத ஏழையாகிய உங்களை எப்படிப் புகழ்ந்து பேசுவேன்? என்றார் இவர்.

அதுவும் நியாயம் தானே. ஒன்றுமில்லாதவனைப் புகழ்ந்து என்னத்திற்கு ஆகப் போகிறது? இப்போது தான் அந்தப் பெரிய மனிதர் யோசித்தார். நாம் என்ன செய்தாலும் இந்த ஏழையின் வாயிலிருந்து புகழ் மொழிகளை வாங்க முடியாது என்று புரிந்து கொண்டார்.புகழ் மொழிகளை விலைக்கு வாங்கி விட முடியாது. அப்படி வாங்க வேண்டும் என்று நினைத்தால் அதனால் எந்த பிரயோசனமும் இல்லை.

புகழ் என்பது தானாக வந்து சேர வேண்டும் என்றால் அதற்குத் தகுந்த மாதிரி நல்ல காரியங்களைச் செய்ய வேண்டும். அது தான் முறை. அதைவிட்டு விட்டு காசு கொடுத்து புகழ வைக்கிறதோ... கடதாசியில் அச்சடித்து சுவற்றிலே ஒட்டுவதோ எத்தனை நாளைக்கு நிலைக்கும் என்று நினைக்கிறீர்கள்?ஒருவன் அப்படி தான் ஒரு சுவற்றில் ஒரு பெரிய விளம்பரம் ஒட்டிக் கொண்டிருந்தான். அருகில் போய் அந்த விளம்பரத்தில் என்ன எழுதியிருக்கு என்று பார்த் தேன்.

பிறந்த நாள் காணும் பெரியவரே! நீங்கள் வாழ்க பல்லாண்டு அப்படி என்று எழுதியிருந்தது. நான் அந்த ஆளைப்பார்த்து. ஏங்க நீங்கள் பிறந்த நாள் வாழ்த்து தெரிவிக்க வேண்டும் என்றால் நேராக அந்தப் பெரியவரையே பார்த்து சொல்லக்கூடாதா? இப்படி இந்தச் சுவற்றிலே உங்கள் வாழ்த்தினை பசை தடவி ஒட்டுறீங்களே... நீங்கள் இங்கே இப்படி ஒட்டுவது அந்தப் பெரியவருக்குத் தெரியுமா என்று கேட்டேன்.. தெரியும் என்றார். எப்படி? என்றேன். அந்தப் பெரியவரே நான் தான் அப்படி என்றான் அந்த ஆள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இழப்பீடுகள் வேண்டாம் எம் பிள்ளைகள் வேண்டும்

## கிளிநொச்சியில் உறவுகள் போராட்டம்



(தருமபுரம்)

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் நேற்று கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. சர்வதேச விசாரணை தேவை, இழப்பீடுகள் வேண்டாம், எமக்கு பிள்ளைகள் வேண்டும் என்ற கோசங்களையும் பதாதைகளை ஏந்தியும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் போராட்டத்தில் ஈடுபட்டனர். (நி-6-316)



யாழ்.பலாலி சர்வதேச விமான நிலையத்தில் பயணிகள் வெளியேறும் பகுதியில் சுற்றுலாப் பயணிகளுக்கான தகவல் தொடர்பு நிலையம் வடக்கு மாகாண ஆளுநரால் நேற்று திறந்து வைக்கப்பட்டது. (படம்: சிவசாந்தன்)

# புன்னைநீராவி கிராமத்தில் காணி அளவீடு தடுத்து நிறுத்தம்



(முறிகண்டி)

புன்னைநீராவி கிராமத்தில் இராணுவ முகாம் காணி அளவீட்டுப் பணி மக்கள் எதிர்ப்பால் தடுத்து நிறுத்தம்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் உள்ள புன்னைநீராவி கிராமத்தில் இராணுவ முகாம் அமைந்துள்ள காணியினை அளவீடு செய்வதற்காக நேற்று நில அளவைத் திணைக்களத்தினர் வருகை தந்திருந்தனர்.

இந்நிலையில் குறித்த பகுதியில் ஒன்று திரண்ட காணி உரிமையாளர்கள், பொதுமக்கள், கரைச்சி பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் சண்முகம் ஜீவராஜ் ஆகியோர் அளவீட்டு பணிக்கு எதிர்ப்பு தெரிவித்தனர்.

இதனையடுத்து குறித்த காணி அளவீடு நிறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-6-100)

# ஐ.நா வதிவிட பிரதிநிதி அமைச்சர் டக்ளஸ் சந்திப்பு



(யாழ்ப்பாணம்)

ஐக்கிய நாடுகளுக்கான இலங்கைக்கான வதிவிட இணைப்பாளர் மார்க் அன்ரூ பிரன்ச், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை கொழும்பு மாளிகாவத்தையிலுள்ள கடற்றொழில் அமைச்சின் அலுவலகத்தில் நேற்று சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது கடற்றொழிலாளர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் அது தொடர்பாக முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் தொடர்பிலும் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் தமிழ் பொது வேட்பாளர் விடயங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன.

இக் கலந்துரையாடலில் அமைச்சின் செயலாளர், உதவிச் செயலாளர் மற்றும் கடற்றொழில் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம், உதவிப் பணிப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (நி-6-33)

# இரணைமடு குளத்தில் சட்டவிரோத மீன்பிடி

## நன்னீர் மீனவர்கள் பாதிப்பு

(அக்கராயன்)

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தில் தடை செய்யப்பட்ட இழுவை வலைகளை பயன்படுத்தி சிலர் சட்டவிரோத தொழிலில் ஈடுபட்டு வருவதால் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாக நன்னீர் மீனவர்கள் கவலை தெரிவித்தனர்.

நீரியியல் வள திணைக்களம் குறித்த தடை செய்யப்பட்ட இழுவை வலை தொழிலை மேற்கொள்ள வேண்டாம் என அறிவித்தும் அதனைக் கருத்தில் கொள்ளாது குறித்த செயற்பாட்டை முன்னெடுத்து வருவதாக நன்னீர் மீனவர்கள் தெரிவித்தனர்.

இரணைமடுக் குளத்தை நம்பி 152 குடும்பங்கள் தங்களது வாழ்வாதார தொழிலாக நன்னீர் மீன்பிடி தொழிலை மேற்கொண்டு வருகின்றனர். இதனால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாக தெரிவித்தனர்.

இது தொடர்பில் திணைக்கள அதிகாரி ஒருவரை தொடர்பு கொண்டு வினவிய போது இந்த விடயம் தொடர்பில் தனக்கும் தகவல் கிடைத்ததாகவும் குறித்த தடை செய்யப்பட்ட தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார். (நி-6-350)

# முரசுமோட்டை முருகானந்தாவுக்கு புதிய அதிபர்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி முரசுமோட்டை முருகானந்தா கல்லூரியின் முதல்வராக அரசரத்தினம் பங்கையற்செல்வன் நேற்று முன்தினம் கடமையைப் பொறுப்பேற்றார். (நி-6-316-350)

# புதுக்குடியிருப்பு தேவிபுரம் பாடசாலையின் கூரை சீரமைப்பு



(அக்கராயன்)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு தேவிபுரம் பாடசாலையின் கூரையின் மரங்கள் சீர் செய்யப்பட்டுள்ளன.

2010 ஆம் ஆண்டின் பின்னர் இப்பாடசாலையின் ஆரம்ப பிரிவு மாணவர்கள் கல்வி பயிலும் வகுப்பறை ஒன்றின் கூரையின் மரங்கள் சேதமடைந்து காணப்பட்ட நிலையில் தொடர்ச்சியாக விடுக்கப்பட்ட கோரிக்கைக்கமைவாக முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிமனையினால் ரூபாய் 8 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு தற்போது கூரையின் புதிய மரங்கள் சீர் செய்யப்பட்டுள்ளன. (நி-6-350)

# குப்பையோடு குப்பையாக போடப்பட்ட 42 பவுண் நகைகள்

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சங்கத்தானைப் பகுதியில் 42 பவுண் தங்க நகைகள் தவறுதலாக குப்பையோடு குப்பையாக போடப்பட்ட சம்பவம் தொடர்பான கடந்த ஞாயிற்றுக்கிழமை பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, போத்தல் ஒன்றினுள் பாதுகாப்பாக வைக் [illegible] நகைகள் [illegible] குப்பையோடு குப்பையாக கழிவு வைக்கப்படும் இடத்தில் வைக்கப்பட்டு பின்னர் அது கழிவகற்றும் வாகனம் ஊடாக சாவகச்சேரியில் உள்ள குப்பை மேட்டினை வந்தடைந்துள்ளது.

இந்நிலையில் தமது நகைகள் தவறுதலாக குப்பையோடு போடப்பட்டதனை உணர்ந்த உரிமையாளர்கள் இது தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

இது தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸார் சம்பந்தப்பட்ட தரப்பினரை அழைத்து விசாரணை நடத்திய போதிலும் இதுவரை காணாமல் போன நகைகள் தொடர்பாக எந்த விதமான தகவல்களும் கிடைக்கப்பெறவில்லை என பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை கடந்த ஒரு வருடத்திற்கு முன்னராகவும் சாவகச்சேரியில் இது போன்ற தொரு சம்பவம் நடந்த நிலையில் சாவகச்சேரி நகரசபையின் ஊழியர்கள் தேடுதல் நடத்தி தவறுதலாக குப்பை மேட்டை வந்தடைந்த 18 பவுண் நகைகளை மீட்டு உரிமையாளரிடம் கையளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 3

காவியத் தொடர் 517





எங்களுடன் தஞ்சாவூருக்கு வாருங்கள்! விருந்தாளியாக வர அழைப்புக் கிடைக்காவிட்டால் சிறையாளியாகவாவது வாருங்கள்!"

"தங்களுடைய அழைப்பே எனக்குப் போதும்" என்றான் பார்த்திபேந்திரன்.

பழுவேட்டரையர் ஏறி வந்த படகு கரையை அடைந்தது. கிழவர் படகிலிருந்து இறங்கி ஆங்காரமே உருவெடுத்தவர் போல் வந்தார்.

நந்தினியும், பார்த்திபேந்திரனும் எழுந்து நின்றார்கள். அவர்களைப் பழுவேட்டரையர் பார்த்த பார்வையில் அனல் பொறி கிளம்பிற்று. பாவம்! அத்தனை நேரம் அவர்கள் சேர்ந்து உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்ததை நினைத்தாலே கிழவருக்குக் கோபமாயிருந்தது. அதை வெளியிடுவதற்கும் வழியில்லை. ஆகையால் உள்ளத்தில் கோபம் மேலும் கொதித்துப் பொங்கியது.

"நாதா! கப்பலை நன்கு சோதித்தீர்களா? மாலுமிகளை நன்றாய் விசாரித்தீர்களா? இவர் கூறியதெல்லாம் உண்மைதானா?" என்று நந்தினி கொஞ்சம் குதலை மொழியில் கேட்டாள்.

அந்தக் குரல் பழுவூர் அரசரைக் கொஞ்சம் சாந்தப்படுத்தியது.

"ஆம், ராணி! இவன் கூறியதெல்லாம் உண்மை யென்று தெரிந்தது? சோழ நாட்டின் தவப்புதல்வன், சோழகுலத்தின் செல்வக் குமரன், தமிழகத்தின் கண்ணின் மணியான இளவரசன், போய்விட்டான்!" என்று கூறிப் பல்லவனைத் திரும்பிப் பார்த்து, "அதற்குக் காரணமானவன் இதோ நிற்கும் கொலை பாதக சண்டாளன் தான்!" என்று கர்ஜித்தார்.

"ஐயா! அதற்குக் காரணம் நான் அல்ல என் பேரில் பழி போடாதீர்கள்! இளவரசரைக் கடல் கொண்டதற்குக் காரணம் சோழ நாட்டையே ஆட்டுவிக்கும் பெண் உருக் கொண்ட மோகினிப் பிசாசு!" என்றான் பார்த்திபேந்திரன்.

கிழவரின் கோபம் இப்போது அணை கடந்த வெள்ளமாயிற்று. நந்தினியைப் பற்றித்தான் அவன் அவ்வாறு சொன்னதாக எண்ணினார்.

"அடபாவி! என்ன சொன்னாய்?" என்று கூறிக் கொண்டு தரையில் கிடந்த ஈட்டியைச் சட்டென்று குனிந்து எடுத்தார். பார்த்திபேந்திரனைக் குறி வைத்து ஓங்கினார்.

நந்தினி அவருடைய கையைப் பிடித்துத் தடுத் தாள். "நாதா! இது என்ன காரியம்! எத்தனையோ பகைவர்களைக் கொன்ற தங்கள் வெற்றிவேல் இந்த விருந்தாளியின் இரத்தத்தினால் கறைபடலாமா?" என்றாள்.

"ராணி! இவனா விருந்தாளி! சற்று முன்னால் உன்னைப்பற்றி இவன் கூறியதை நீ கேட்கவில்லையா?" என்றார் கிழவர். கோபத்தினால் அவர் குரல் குழறிச் சொற்கள் தடுமாறின.

"அவர் என்னைப் பற்றியா சொன்னார்? நன்றாகக் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். அப்படியானால் என் கையிலுள்ள கத்தியினாலேயே பழி வாங்குவேன். தங்களுக்குச் சிரமம் தரமாட்டேன்!" என்றாள் நந்தினி.

"ஐயா! நான் என்ன பைத்தியமா, பழுவூர் இளைய ராணியைப் பற்றி அவ்விதம் சொல்வதற்கு? பழையாறையில் உள்ள மோகினிப் பிசாசைப் பற்றியல்லவா சொன்னேன்?

(தொடரும்)



## சிறுவர் அரங்கம்

### சிறந்த ஆயுதம்



(நேற்றைய தொடர்ச்சி)

மறுநாள் சபையில் அக்பர், "திடீரென்று ஒருவனை அபாயம் சூழ்ந்தால், அவனுடைய தற்காப்புக்காகப் பயன்படும் சிறந்த ஆயுதம் எது?" என்று சபையோர்களை நோக்கி ஒரு கேள்வி கேட்டார்.

"வாள்!" என்றார் ஒருவர். "இல்லை!" என்று மறுத்த பீர்பால், சில சமயங்களில் வாள் பிடித்த கரம் செயலற்றுப் போவதுண்டு!" என்றார். "எதிரி மீது தொலைவிலிருந்தே குறிபார்த்து ஈட்டியை வீசுவதன் மூலம் அபாயத்திலிருந்து தப்பலாம்!" என்றார் மற்றொருவர்.

"பதற்றத்தில் ஈட்டியின் குறி தவறினால், அது பயன்படாது!" என்றார் பீர்பால். "சரிதான்! வாள், ஈட்டி என்று எந்த ஆயுதமுமே சரியில்லை என்றால், எதுதான் ஆபத்தில் பயன்படும்?" என்று அக்பர் கேட்க, "சூழ்நிலைக்கு ஏற்றவாறு சிந்தித்து செயற்படும் நமது அறிவே சிறந்த ஆயுதம் ஆகும்!" என்றார் பீர்பால்.

"வெறும் பிதற்றல்! நீ ஆபத்தில் சிக்கிக் கொள்ளும்போது உன் மூளை எப்படி வேலை செய்கிறது என்று பார்க்கிறேன்!" என்று அக்பர் கிண்டல் செய்ய, சபையோர் அனைவரும் சேர்ந்து பீர்பாலை எள்ளி நகையாடினர். "சமயம் வரும்போது நான் கூறியது உண்மை என்று நீங்களே தெரிந்து கொள்வீர்கள்!" என்றார் பீர்பால்.

மறுநாள், அக்பர் சில பிரமுகர்களுடன் நதிக்கரையில் உலாவிக் கொண்டிருந்த போது, பீர்பாலும் உடனிருந்தார். அப்போது, ஒரே கூச்சலும், கூக்குரலும் கேட்க, மக்கள் தலை தெறிக்க ஓடிக் கொண்டிருந்தனர். சக்கரவர்த்தியைக் கண்ட அவர்கள் ஓடோடி வந்து, "பிரபு! ஆபத்து! அபாயம்! பட்டத்து யானைக்கு திடீரென மதம் பிடித்து விட்டது.

அது இந்தப் பக்கம் தான் ஓடி வந்து கொண்டிருக்கிறது. நீங்கள் உடனே ஓடிவிடுங்கள்!" என்று கூச்சலிட்டனர். அவர்கள் கூறி முடிப்பதற்குள் தொலைவில் மதயானை ஓடி வருவது தெரிந்தது.

உடனே, அக்பர் தன் இடையிலிருந்து வாளை உருவ, கூடியிருந்த அனைவரும் தங்கள் வாட்களை உருவிக் கொண்டனர். ஆனால், மதம் பிடித்த யானையை வாள் கொண்டு சமாளிக்க முடியாது என்று உணர்ந்ததும், அவர்கள் திக்பிரமை பிடித்து சிலைகளாக நின்றனர். தன்னைப் பெரிய ஆபத்து எதிர் நோக்கியிருக்கிறது என்பதை அக்பரும் உணர்ந்தார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

> ஒருவனின் தன்னம்பிக்கையும் சுய ஒழுக்கமுமே அவனது அதிர்ஷ்டத்தை தீர்மானிக்கும். – *வைரஸ்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சர்வதேசத்தின் வேகத்துக்கு எங்களிடம் வேகம் இல்லை

எங்களுக்கான தீர்வை தமிழ் அரசியல் தரப்புகள் பெற்றுத் தருமென நாம் நம்புவோமாயின், அதைவிட்ட மடமைத்தனம் வேறு எதுவுமாக இருக்க முடியாது.

உண்மை. தமிழ் மக்களுக்கு ஆன அரசியல் தலைமை இல்லை. இதை நாம் கூறும்போது, அப்படியானால், தமிழ் மக்கள் சார்பில் பாராளுமன்றத்தில் இடம்பெறும் தமிழ்ப் பிரதிநிதித்துவம் என்ன? என்று நீங்கள் யாரேனும் கேட்கலாம்.

இங்குதான் ஒரு விடயத்தை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். அதாவது பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் என்பது தேர்தல் மூலமாக நிர்ணயம் செய்யப்படுவது.

பொதுத் தேர்தலில் போட்டியிடுகின்றவர்களில் இருந்து தெரிவு செய்யப்படுகின்ற ஒரு நடைமுறைதான் பாராளுமன்றப் பிரதிநிதித்துவம்.

எனவே மக்கள் மத்தியில் செல்வாக்குடையவர்கள் அல்லது தேர்தல் பிரசாரங்களை மிக நுட்பமாகக் கையாளக்கூடியவர்கள் தேர்தலில் வெற்றி பெறக்கூடிய வாய்ப்பு உண்டு.

ஆகையால், பாராளுமன்றப் பிரதிநிதிகள் நம் பிரச்சினையைக் கையாள்வார்கள். அவர்கள் நமக்குத் தீர்வைப் பெற்றுத் தருவார்கள் என நினைப்பது நம் தவறேயன்றி அவர்களுடையதல்ல.

இதை நாம் கூறும்போது, அப்படியானால், இதற்கு என்னதான் செய்ய வேண்டும் என்ற கேள்வி எழும்.

இங்குதான் தமிழ் மக்களுக்கான அரசியல் உரிமையை வென்றெடுக்கக்கூடிய மக்கள் இயக்கம் தேவைப்படுகிறது.

இந்த மக்கள் இயக்கம் என்பது தமிழ் மக்களின் உரிமையைப் பெற வேண்டுனெ நினைக்கக்கூடிய தமிழ் அரசியல் தரப்புக்களையும் உள்ளடக்கியதென்பது புரிதற்குரியது.

எனினும் எங்கள் துரதிர்ஷ்டம் போலும் மக்கள் இயக்கமாக உருவெடுத்த தமிழ் மக்கள் பேரவை சுயநலமிக்கவர்களால் நினைவற்றதாக ஆக்கப்பட்டுள்ளது.

உண்மை. தமிழ் அரசியல்வாதிகள் மட்டுமல்ல பொது வெளியில் இருக்கக்கூடிய சில தமிழர்களும் தமிழ் மக்களுக்கு எதிராக இருப்பதுதான் மிகப்பெரிய அபத்தம்.

ஆம், இலங்கைத் தமிழர்கள் விடயத்தில் உலக நாடுகள் எமக்குச் சாதகமாக இருக்கின்றன.

இருந்தும் அந்த சாதகமான சூழ்நிலையைத் தக்கவாறு பயன்படுத்துவதற்கு எம்மிடம் ஆன தமிழ்த் தலைமை இல்லை என்பதுதான் வேதனைக்குரிய விடயம்.

ஆம், இலங்கையில் இடம்பெற்ற பாரிய அநீதிகளுக்கு, நீதி மற்றும் பொறுப்புக்கூறலை உறுதி செய்ய இலங்கையை சர்வதேச நீதிமன்றில் நிறுத்துவோம் என பிரிட்டன் தொழிற்கட்சி திடசங்கற்பம் பூண்டுள்ளது. இருந்தும் அதனை எமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதற்கு எங்களிடம் தமிழ்த் தலைமை வெற்றிடமாக இருப்பது மிகப்பெரிய பாதகமாகும்.

எனவே தமிழ் மக்களின் உரிமை வென்றெடுக்கப்பட வேண்டுமாயின், தமிழ் மக்கள் பேரவை என்ற மக்கள் இயக்கம் மீளவும் எழுகை பெறுவது மிகவும் அவசியமானது.

# நீதித்துறை விவகாரங்களில் தலையிடுவதை பாராளுமன்ற உறுப்பினர்கள் தவிருங்கள்

## சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்து

(கொழும்பு)

பாராளுமன்ற சிறப்புரிமைகள் என்ற போர்வையில், நீதித்துறை மற்றும் நீதிச்சேவைகள் ஆணைக்குழுவின் விவகாரங்களில் தலையிடுவதை பாராளுமன்ற உறுப்பினர்கள் தவிர்க்க வேண்டும் என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

அவ்வாறான செயற்பாடுகளால் நீதித்துறை மீதான பொதுமக்களின் நம்பிக்கை மீறப்படுவது போன்ற மோசமான விளைவுகள் ஏற்படும் என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீதித்துறையின் சுதந்திரத்தையும் சட்டவாட்சியையும் பாதுகாப்பதற்கு தாம் அர்ப்பணிப்புடன் இருப்பதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

சுதந்திரமான மற்றும் தைரியமான நீதித்துறையை ஆதரிப்பதாகவும், சட்டவாட்சியை பாதுகாப்பது அவசியம் எனவும் அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நீதித்துறை அதிகாரி ஒருவருக்கு எதிராக ஏதேனும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுமாயின், முதலில் அதனை பாரபட்சமின்றி விசாரணை செய்ய வேண்டும் எனவும் அதில் கூறப்பட்டுள்ளது.

அவ்வாறான விசாரணையின் பின்னர், நீதித்துறை அதிகாரி குற்றமிழைத்துள்ளார் என்பது உறுதி செய்யப்படும் பட்சத்தில், உரிய நடவடிக்கை எடுக்க முடியும் என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.(ம-7,10)

# எனது பாராளுமன்ற சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது

## சபாநாயகரிடம் விஜயதாச முறைப்பாடு

நாட்டின் மாவட்ட நீதிபதிகள் மற்றும் நீதவான்களின் தொழில்சார் அமைப்பான நீதிச் சேவைகள் சங்கம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையூடாக தமது பாராளுமன்ற சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளதாக நீதி அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ சபாநாயகரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

பாராளுமன்றத்தின் அதிகாரம் மற்றும் சிறப்புரிமைகள் குழு முன்னிலையில், குறித்த சங்கத்தின் தலைவர் மற்றும் செயலாளரை அழைத்து விசாரணை நடத்தி உரிய தீர்ப்பை வழங்குமாறு நீதி அமைச்சர் சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நீதிபதிகள் சிலர் மற்றும் நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் தொடர்பில் நீதி அமைச்சர் கடந்த 19 ஆம் திகதி பாராளுமன்றத்தில் கருத்து வெளியிட்டிருந்தார்.

கடந்த 19 ஆம் திகதி நீதி அமைச்சர் பாராளுமன்றத்தில் தெரிவித்த கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு நீதிச் சேவைகள் சங்கம் நேற்று முன்தினம் ஊடக அறிக்கையொன்றை விடுத்துள்ளது.

சங்கத்தின் தலைவர், கேகாலை மாவட்ட நீதவான் ருவன் திசாநாயக்க மற்றும் செயலாளர், காலி நீதவான் இசுறு நெத்திகுமார ஆகியோரின் கையொப்பத்துடன் அறிக்கை வெளியிடப்பட்டது.

நீதிமன்ற கட்டமைப்பை விமர்சிக்கும் வகையிலான பொறுப்பற்ற கருத்துகள் தொடர்பில் தமது சங்கத்தின் கவனம் திரும்பியுள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நீதித்துறைக்கு ஏற்படும் வெளித்தரப்பு அழுத்தங்களை தவிர்த்து, அதன் நலனுக்காக முக்கிய முடிவுகளை எடுத்த நீதிபதிகள் இடமாற்றம் செய்யப்பட்ட பின்னர், அவர்களுக்கு தனிப்பட்ட ரீதியில் அபகீர்த்தி ஏற்படும் வகையில் நிலைப்பாட்டை உருவாக்குவது இதன் ஒரு நடவடிக்கையாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீதித்துறை மீதான வெளிப்புற அழுத்தங்களிலிருந்து பாதுகாப்பதற்கான பலமிக்க மற்றும் கடினமான பணியை ஆற்றி வரும் நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளரை பாதுகாப்பதற்காக தாம் நிபந்தனையின்றி முன்னிற்பதாகவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கை தொடர்பாக சிறப்புரிமை கேள்வி எழுப்பி, நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஸ, பிரதம நீதியரசர் மற்றும் நீதிச் சேவைகள் ஆணைக் குழுவின் செயலாளருக்கு நகல்களை அனுப்பி, நேற்று சபாநாயகருக்கு எழுத்து மூல முறைப்பாடு ஒன்றை அனுப்பியுள்ளார். (ம-7,10)

# பாதாளக் கும்பலை சேர்ந்த 7 பேர் கைது

பாதாள உலக செயற்பாடுகளை ஒடுக்குவதற்காக உருவாக்கப்பட்ட 20 விசேட குழுக்களால் நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (24) மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த மேலும் ஏழு பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது பாதாள உலகக்கும்பலுடன்தொடர்புடையவர்கள் என சந்தேகிக்கப்படும் மேலும் 27 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேல் மாகாணத்தின் வடக்கு பிராந்திய பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினரின் சுற்றிவளைப்பில்கந்தானை, துனகஹ மற்றும் வென்னப்புவ ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 32 மற்றும் 40 வயதுடைய மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேல் மாகாணத்தின் தெற்கு பிராந்திய பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினரின் சுற்றிவளைப்பில் வஹரக பகுதியைச் சேர்ந்த 33 வயதுடைய சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினரின் சுற்றிவளைப்பில் கொழும்பு 12 பகுதியைச் சேர்ந்த 62 வயதுடைய சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாத்தறை பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினரின் சுற்றிவளைப்பில் வலஸ்கல மற்றும் தங்காலை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 32 மற்றும் 44 வயதுடைய இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த மார்ச் மாதம் 19ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்த சுற்றிவளைப்பில் இதுவரை பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த 1,842 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-7,10)

# விபரீத முடிவெடுத்த உயர்தர மாணவன் மரணம்

உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர் ஒருவர் தன்னைத் தானே துப்பாக்கியால் சுட்டுக் கொண்டு தற்கொலை செய்து கொண்டுள்ள துயரச்சம்பவம்ஒன்று கம்பளை பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

கம்பளை வீதி உலப்பனையைச்சேர்ந்த கே.எம். பி.ஆர்.ஜி. குலசேகர என்ற 18 வயது மாணவனே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

இவர் கண்டியில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றில் கணிதப்பிரிவில் பயின்று வந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவரது தாய் ஆசிரியை எனவும், தந்தை வனத்துறையில் பணியாற்றி ஓய்வு பெற்று, தற்போது தனியார் நிறுவனமொன்றில் பணியாற்றி வருகிறார் என்றும் குறிப்பிடப்படுகிறது. தந்தை மறைத்து வைத்திந்த அவரது துப்பாக்கியை கண்டு பிடித்த மாணவன், துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலை செயது கொண்டுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வேலைக்குச் செல்லும் தனது தாயாரை வணங்கி, பின்னர் அறைக்குச் சென்ற குறித்த மாணவன், அறையின் கதவைப் பூட்டிவிட்டு துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார் என்று கம்பளை, உலப்பன பொலிஸார் தெரிவித்தனர். (ம-7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பங்களாதேஷ் உருவான கதையும் அந் நாட்டின் தேர்தல்களும் - ஒரு பார்வை

**கலாநிதி க.தவலிங்கம்**
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

02

ஆற்றங்கரை ஆக்கிரமிப்பு, மண் அரிப்பு, பேரிடர் தயார் நிலை, மரம் வளர்ப்பு, மாசுக்கட்டுப்பாடு, திண்மக் கழிவு மேலாண்மை, கார்பன் வெளியேற்றம், நீர் மாசுபடுதல் மற்றும் காலநிலைக்கு ஏற்ற விவசாயத்தை ஊக்குவிப்பதில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகியவற்றில் பெண் பிரதிநிதிகள் தொடர்ந்து முக்கிய பங்காற்றி வருகின்றனர்.

வங்காளதேசம் ஒரு பெண் சபாநாயகரைக் கொண்டிருந்தது, மேலும் 2009-2013 இற்கு இடையில், நாட்டில் ஒரு பெண் வெளியுறவு அமைச்சரும் இருந்தார். பங்களாதேஷில் அடிமட்ட அரசியலில் குறிப்பிடத்தக்க பெண்களின் ஈடுபாடு இருப்பதோடு அவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு இருந்தபோதும் குறைந்த உயர்கல்வி விகிதங்கள், செல்வாக்கு மற்றும் அரசியல் தொடர்புகள் இல்லாமை, பிரச்சார நிதி மற்றும் மத மற்றும் சமூக தப்பெண்ணங்கள் போன்ற கட்டமைப்பு மற்றும் சமூக தடைகள் போன்ற காரணங்களினால் அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற பதவிகளில் குறைந்த சதவீத பெண்களுக்கே தொடர்ந்து பங்களிப்பு கொடுக்கப்படுகிறது.

பங்களாதேஷின் தேர்தல்கள் வரலாற்று ரீதியாக குறிப்பிடத்தக்க பதட்டங்களுக்கு உட்பட்டு எனலாம், அதன் கடந்த 11 தேர்தல்களில் நான்கு, இவை அனைத்தும் ஒரு நடுநிலையான கவனிப்பு அரசாங்கத்தின் கீழ் நடத்தப்பட்டன. இந்நான்கு தேர்தலுகளும் பரவலாக "சுதந்திரமான மற்றும் நியாயமானவை" என்று கருதப்படுகின்றன. மற்றைய தேர்தல்கள் பல விமர்சனங்களுக்கு உள்ளானவை.

இவ் வருடம் நடைபெற்ற 12 ஆவது தேர்தலில் 300 தொகுதிகளுக்கு 2000 வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள். (கூடுதலாக 50 இடங்கள் பெண்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது). இத் தேர்தலில் வாக்களிக்க புதிய இளைஞர் வாக்காளர்களாக உள்ளனர். இது ஒரு பங்கேற்பு ஜனநாயக செயல் முறையாகும். இவ்வாறு இருந்த போதும் ஜனவரி 7, 2024 அன்று நடைபெற்ற அதன் 12 ஆவது தேர்தல் சர்ச்சையில் மூழ்கியுள்ளது. இவை பற்றி விரிவாகப் பார்க்குமுன் பங்களாதேசத்தின் வரலாற்றைப் பார்போம்.

**பங்களாதேசத்தின் வரலாறு**

வங்காளதேசம் (பங்களாதேஷ், பங்களாதேசம், Bangladesh) ஒரு தெற்காசிய நாடாகும். இது பண்டைய வங்காளத்தின் ஒரு பகுதியாக இருந்தது. இந்தியா, மியான்மர் ஆகியவை இதன் அண்டை நாடுகளாகும். டாக்கா இதன் தலைநகரமாகும். இந்தியாவின் மேற்கு வங்காளம் மாநிலத்தைப் போன்று, இந்நாட்டிலும் வங்காள மொழியே பேசப்படுகிறது. இம் மொழியை விட வேறு சில மொழிகளும் சிறிய எண்ணிக்கையில் பேசப்படுகின்றன.

இந்நாட்டின் எல்லைகள் 1947 ஆம் ஆண்டு வங்காளதேசம் பிரிவினையின் (கிழக்கு பாகிஸ்தானாக பிரிந்தபோது) நிறுவப்பட்டது. 1947 ஆம் ஆண்டு இந்திய விடுதலைக்குப்பின், இப்பகுதி கிழக்கு பாக்கிஸ்தான் என்ற பெயரில் பாக்கிஸ்தான் நாட்டின் பகுதியாக இருந்தது. இருப்பினும், இப்பகுதிக்கும் மேற்கு பாக்கிஸ்தான் பகுதிக்கும் இடையிலான தொலைவு சுமார் 1600 கிலோமீற்றர்.

மேற்கு பாக்கிஸ்தானுக்கும் கிழக்கு பாக்கிஸ்தானுக்கும் இடையான எந்த போக்குவரத்தும் இந்தியாவின் வழியாகவே நடைபெறவேண்டும் என்ற நிலையில், மொழி வேறுபாடு காரணமாகவும், பொருளாதாரப் புறக்கணிப்பு காரணமாகவும், கிழக்குப் பாக்கிஸ்தான் மக்களிடையே எழுச்சி ஏற்பட்டது. தனி நாடு கோரிக்கை முன் வைக்கப்பட்டது. 1971 ஆம் ஆண்டு கிழக்கு பாக்கிஸ்தான் பகுதி இந்தியாவின் துணைக் கொண்டு வங்காளதேச விடுதலைப் போருக்குப் பின் வங்காள தேசம் என்ற நாடாக அறிவிக்கப்பட்டது.

இதன்பின், வங்காள தேசம், ஏழ்மை, இயற்கை அழிவுகள், பஞ்சம் ஆகிய பல இன்னல்களை மட்டுமல்லாது, அரசியல் களத்திலும் இராணுவ ஆட்சி, பேச்சுரிமை மறுக்கப்பட்ட நிலை, ஊழல் போன்ற பல துயர்களைக் கடந்து வந்துள்ளது. 1991 ஆம் ஆண்டு மீண்டும் மக்களாட்சி மலர்ந்துள்ள நிலையில் நிலைமை சிறிதளவு கட்டுக்குள் வந்துள்ளது.

வங்காளதேசம் உலகின் எட்டாவது அதிக மக்கட்தொகை கொண்ட நாடாகும். வங்காளதேசக் குடியரசு பாராளுமன்ற ஜனநாயக நாடாகும். இதன் நாடாளுமன்றம் ஜாதியோ சங்சத் என அழைக்கப்படுகிறது. இந்நாடு, வளமிக்க கங்கை-பிரமபுத்திரா கழிமுகத்தில் அமைந்துள்ளதோடு, வரலாற்று மற்றும் பல்வேறு கலாசார மரபுரிமைகளையும் கொண்டுள்ளது. ஊழல் மற்றும் வறுமை போன்ற பல்வேறு பாரிய சவால்கள் காணப்பட்டாலும், 1991 இலிருந்து நாட்டின் பொருளாதாரம் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சி பெற்றுள்ளது.

மேலும், 1975 உடன் ஒப்பிடுகையில் தனிநபர் வருமானமும் இருமடங்காகியுள்ளது. வங்காளதேசம் தெற்காசிய நாடுகளின் பிராந்தியக் கூட்டமைப்பு (SAARC), வங்காள விரிகுடா பல்துறை தொழில்நுட்ப பொருளாதார கூட்டுறவிற்கான முன்னெடுப்பு (BIMSTEC), இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பு (OIC) மற்றும் பொதுநலவாய நாடுகள் ஆகியவற்றின் உறுப்பினராகவும் விளங்குகிறது.

புவியியல் ரீதியாக நாடு கங்கை பிரமபுத்திரா கழிமுகத்தின் இருபக்கங்களிலும் அமைந்துள்ளது. இதனால், வருடாந்தம் வெள்ளப்பெருக்கு மற்றும் புயல் ஆகியவற்றால் பாதிக்கப்படுகிறது. மேலும் இந்நாடு வறுமை, மிகை மக்கட் தொகை மற்றும் காலநிலை மாற்றம் போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது.

எவ்வாறாயினும், வங்காளதேசம் மனித அபிவிருத்திச் சுட்டெண்ணில் சிறப்பாக முன்னேற்றம் கண்டுள்ளது. மேலும், ஆயுள் எதிர்பார்ப்பை 23 வருடங்களால் உயர்த்திக் கொள்வதிலும், கல்வியில் பால்நிலைச் சமத்துவத்தை அடைவதிலும், மக்கட்தொகை அதிகரிப்பைக் குறைப்பதிலும், தாய்சேய் நலத்தை மேம்படுத்துவதிலும் வெற்றி கண்டுள்ளது. நாட்டின் இரு பாரிய நகரங்களான டாக்கா மற்றும் சிட்டகொங் ஆகியவை நாட்டின் அண்மைய வளர்ச்சிக்குப் பாரிய உந்துசக்தியாக விளங்குகின்றன.

வங்காளதேச நாட்டின் நிர்வாக வசதிக்காக, இது 64 மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்த 64 மாவட்டங்களும் (districts), 8 கோட்டங்களின் (divisions) நிர்வாகத்தில் செயற்படுகிறது. கோட்டங்கள் பங்களாதேஷின் முதல் நிலை நிர்வாகப் பிரிவுகளாகும்.

2023 ஆம் ஆண்டு நிலவரப்படி, பங்களாதேஷில் எட்டு கோட்டங்கள் (பிரிவுகள்) உள்ளன. அவை ஒவ்வொன்றும் அதன் அதிகார வரம்பிற்குள் உள்ள முக்கிய நகரத்தின் பெயரால் அழைக்கப்படுகின்றன. அது அந்தப் பிரிவின் நிர்வாக இடமாகவும் செயற்படுகிறது. ஒவ்வொரு பிரிவும் பல மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன, அவை மேலும் உபஜிலாக்களாகவும், பின்னர் யூனியன் கவுன்சில்களாகவும் பிரிக்கப்படுகின்றன.

1971 இல் வங்காளதேசம் சுதந்திரமடைந்ததைத் தொடர்ந்து, நாட்டில் நான்கு பிரிவுகள் இருந்தன: சிட்டகாங் பிரிவு, டாக்கா பிரிவு, குல்னா பிரிவு மற்றும் ராஜ்ஷாஹி பிரிவு. 1982 ஆம் ஆண்டில், டாக்கா பிரிவின் ஆங்கில எழுத்துப்பிழை (தலைநகரின் பெயருடன்) வங்காள உச்சரிப்புடன் மிகவும் நெருக்கமாக பொருந்துவதற்காக மாற்றப்பட்டது.

1993 இல், பாரிசல் பிரிவு குல்னா பிரிவில் இருந்து பிரிக்கப்பட்டது, 1995 இல் சில்ஹெட் பிரிவு சிட்டகாங் பிரிவில் இருந்து பிரிக்கப்பட்டது. 25 ஜனவரி 2010 அன்று, ரங்பூர் பிரிவு ராஜ்ஷாஹி பிரிவில் இருந்து பிரிக்கப்பட்டது. 14 செப்டம்பர் 2015 அன்று, மைமென்சிங் பிரிவு டாக்கா பிரிவில் இருந்து பிரிக்கப்பட்டு எட்டாவது பிரிவாக சேர்க்கப்பட்டது.

2015 இல், மேலும் இரண்டு பிரிவுகளை உருவாக்குவதற்கான செயல்முறை தொடங்கியது. கொமிலா பிரிவு மற்றும் ஃபரித்பூர் பிரிவு. ஒக்டோபர் 2021 இல், பிரதம மந்திரி ஷேக் ஹசீனா இரண்டு புதிய பிரிவுகளை மேக்னா மற்றும் பத்மா, (நதிகளின் பெயர்கள் இடப்பட்டது) உருவாக்குவதாக அறிவித்தார்.

குல்னா கோட்டத்தில் 10 மாவட்டங்களும், டாக்கா கோட்டத்தில் 13 மாவட்டங்களும், சிட்டகாங் கோட்டத்தில் 11 மாவட்டங்களும், மைமன்சிங் கோட்டத்தில் 4 மாவட்டங்களும், ரங்பூர் கோட்டத்தில் 8 மாவட்டங்களும், ராஜசாகி கோட்டத்தில் 8 மாவட்டங்களும், பரிசால் கோட்டத்தில் 6 மாவட்டங்களும் மற்றும் சில்ஹெட் கோட்டத்தில் 4 மாவட்டங்களும் உள்ளது.

**பங்களாதேஷில் மதம்**

ஐக்கிய நாடுகள் சபை பங்களாதேஷை ஒரு மிதவாத ஜனநாயக முஸ்லீம் நாடாக வகைப்படுத்துகிறது. சுன்னி இஸ்லாம் நாட்டில் நடைமுறையில் உள்ள மிகப்பெரிய மற்றும் மேலாதிக்க மதமாகும்.

பங்களாதேஷின் அரசியலமைப்பில், அரசியலமைப்பின் அறிமுகம் மற்றும் பகுதி I இல் இஸ்லாம் இரண்டு முறை குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஆவணம் பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம் என்ற இஸ்லாமிய சொற்றொடருடன் தொடங்குகிறது, இது ஆங்கிலத்தில் "அல்லாஹ்வின் பெயரில், கருணையுள்ள, கருணையாளர்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. மற்றும் கட்டுரை (2A) "இஸ்லாம் மதக் குடியரசு" என்று கூறுகிறது.

பங்களாதேஷில், நான்கு முக்கிய மதங்கள் உள்ளன. இஸ்லாம், இந்து, பௌத்தம் மற்றும் கிறிஸ்தவம். ஒரு சிலர் சீக்கியம், பஹாய் நம்பிக்கை, சர்னாயிசம், ஆனிமிசம் மற்றும் வேறு சில மதங்களையும் பின்பற்றுகிறார்கள். பங்களாதேஷின் அனைத்து மாவட்டங்களிலும் இஸ்லாம் மிகப்பெரிய மதமாகும்.

இஸ்லாம் அரச மதமாக இருந்தாலும், பங்களாதேஷ் பெரும்பாலும் மதச்சார்பற்ற சட்டங்களால் ஆளப்படுகிறது, இச் சட்டங்கள் நாட்டை பிரிட்டிஷ் அரசால் ஆளப்பட்ட காலத்தில் அமைக்கப்பட்டது. "இந்து, பௌத்த, கிறிஸ்தவ மற்றும் பிற நம்பிக்கைகள் மற்றும் மதங்களின் நடைமுறையில் சம அந்தஸ்து மற்றும் சம உரிமையை அரசு உறுதி செய்யும்" என்றும் அரசியலமைப்பு கூறுகிறது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழக...

இந்திய மீனவர்களும் ஒரு படகும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

நெடுந்தீவு கடற்பரப்பில் நேற்று அதிகாலை சட்டவிரோதமான முறையில் மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய இழுவைமடிப் படகைப் பிடிக்க காங்கேசன் துறை கடற்படை முகாமில் இருந்து கடற்படையினர் சென்றிருந்தனர்.

இந்திய மீனவர்களின் படகைக் கைப்பற்ற முனைந்தபோது தமிழக மீனவர்களுக்கும் கடற்படைக்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டதாகவும் இதன்போது தமிழக மீனவர்களின் படகு மோதியதில் குறித்த உயிரிழப்பு சம்பவித்துள்ளது.

கடற்படையினரால் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் 10 பேரும் மீனவர்கள் வந்த படகும் காங்கேசன் துறை கடற்படை முகாமிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

உயிரிழந்த கடற்படை வீரரின் சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

பிரேத பரிசோதனையின் பின்னர் உயிரிழப்புக்கான காரணம் தெரிய வரும்.

சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,10,33,60)

## குளவித் தாக்கு...

டுள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை 4.30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் கூரையின் மேல் தளத்தில் குளவிக் கூடு ஒன்று காணப்பட்டுள்ளது.

மாவட்டச் செயலகத்தில் வர்ணப் பூச்சு வேலைகள் இடம்பெற்று வருகின்றது.

இந்நிலையில் தவறுதலாக வர்ணப்பூச்சு வேலையின்போது குளவிக் கூடு கலைந்துள்ளது.

இதனையடுத்து மாவட்டச் செயலகத்தில் பணியாற்றும் 20 பேர் உள்ளடங்கலாக சுமார் 35 பேர் மீது குளவி தாக்கியுள்ளது.

குளவித் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்கள் பளை மற்றும் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ம-7,10)

## நாடளாவிய...

கோரிக்கைகளை உள்வாங்கி குறித்த போராட்டம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாக ஆசிரியர் சங்க உப தலைவர் தீபன் திலீசன் தெரிவித்தார்.

ஆகையினால் எந்தவித அச்சமும் இல்லாமல் அனைத்து அதிபர், ஆசிரியர்களும் இந்த தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட வேண்டும்.

இத் தொழிற்சங்க நடவடிக்கைக்கு ஏதேனும் இடையூறுகள் ஏற்படுமிடத்து அதற்கு எதிரான நடவடிக்கைகளை ஆசிரியர் சங்கம் நிச்சயம் எடுக்கும் என்றார்.

அதேவேளை சுகவீன விடுமுறை அறிவித்து போராட்டத்துக்கு வலுச் சேர்த்து அதிபர் சம்பள முரண்பாட்டை தீர்க்க அரசுக்கு அழுத்தம் கொடுக்க ஒன்றிணைந்து போராட வட மாகாண அனைத்து அதிபர்களையும் இணையுமாறு இலங்கை அதிபர் சேவை சங்கம் சார்பில் அதிபர் சேவை சங்க வட மாகாண இணைப்பாளர் ஜெ.வோல்வின் அழைப்பு விடுத்துள்ளார்.

இதேவேளை அதிபர் ஆசிரியர் தொழிற்சங்க கூட்டமைப்பின் ஏற்பாட்டில் இன்று முற்பகல் 11 மணியளவில் கொழும்பு கோட்டை ரயில் நிலையம் முன்னிலையில் கவனயீர்ப்பு போராட்டமும் இடம்பெறவுள்ளது (ம-7,10)

## பறிக்க...

அம்பாறையில் நடைபெற்ற நிகழ்வொன்றிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உறுமய காணி உறுதிப்பத்திரம் வழங்கும் திட்டத்திற்காக அரச அதிகாரிகள் பலர் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வரும் நிலையில், ஒரு சிலர் அதனைச் சீர்குலைக்க முயற்சிப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இவ்வாறான அதிகாரிகள் குறித்த தகவல்களை தமது பிரதேசத்திலுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்குமாறு மக்களிடம் கேட்ட ஜனாதிபதி, அதே தகவல்களை தனக்கும் வழங்குமாறு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அறிவித்துள்ளார்.

மக்களின் [illegible]

கொள்ளும் உரிமையை பறிக்க எவருக்கும் இடமளிக்க முடியாது என வலியுறுத்திய ஜனாதிபதி, இந்த வேலைத் திட்டத்தை வெற்றியடைய அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவை கட்சி, எதிர்ப்புகள் இன்றி எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் அம்பாறை மாவட்டத்தின் 17 பிரதேச செயலகப் பிரிவுகளில் தகுதியுள்ள 20,000 பேரில் 1,654 பேருக்கு அடையாளமாக காணி உறுதிகள் வழங்கும் நிகழ்வில் இலவச நிலப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம-7,10)

## கடன்...

பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, இது தொடர்பான உடன்படிக்கைகள் இன்று கைச்சாத்திடப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு நிதி வழங்கும் நாடுகளின் குறுகிய கால கடன் மற்றும் நீண்டகாலக் கடன் போன்ற விடயங்களில் அவதானம் செலுத்திவரும் பரிஸ் கிளப் மற்றும் ஏனைய பங்காளர்களுடன் இலங்கை அரசாங்கம் தொடர்ச்சியாக பேச்சு நடத்தியிருந்தது.

குறிப்பாக ஏற்கெனவே பெற்றுக் கொண்ட கடன்களை மறுசீரமைப்பது மற்றும் கடனை மீளச் செலுத்தும் காலத்தை நீடித்தல் உள்ளிட்ட விடயங்களில் நீண்ட விரிவான உரையாடல்கள் இடம்பெற்றிருந்தன.

அத்தோடு இலங்கையின் நிதி நிலைமைகள் மற்றும் கடன் திட்டங்கள் தொடர்பாக இலங்கையின் அனைத்து அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடனும் நிதி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகள் பேச்சு நடத்தியிருந்ததுடன், சர்வதேச நாணய நிதியமும் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தது.

எனினும், ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ள சூழலில் அரசியல் கட்சிகள் குறிப்பாக பிரதான எதிர்க்கட்சிகள் அதனை அரசியலாக்கு வதாக நிதி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகள் சிலர் விசனம் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையிலேயே தற்போது பரிஸ் கிளப் மற்றும் ஏனைய கடன் பங்குதாரர்களுடனான கடன் மறுசீரமைப்பு உடன்படிக்கைகளுக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இது குறித்து பாராளுமன்றத்திற்கும் வெளிப்படைத்தன்மையான விடயங்கள் வெளிப்படுத்தப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு, பரிஸ் கிளப் குழுவுடனான சந்திப்புக்கு இலங்கையில் இருந்து அதிகாரிகள் குழு அங்கு சென்றுள்ளதாகவும் இதன்போது உடன்படிக்கைகள் கைச்சாத்திடப் படவுள்ளதாகவும் அமைச்சர் பந்துல குணவர்தன மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமை மற்றும் வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று இரவு நாட்டு மக்களுக்கு விசேட உரையாற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,10)


மஹஜன சம்பத
திகதி 2024.06.25
சீட்டிழுப்பு இலக்கம் 5515
D 5 2 4 2 5 4
அத சம்பத D 4 2 5 4
சீட்டிழுப்பு இலக்கம் 0090
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.06.25
சீட்டிழுப்பு இலக்கம் - 1545
L 12 22 36 52 L
61285

மெகா பவர்
திகதி 25/06/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1863
P 06 04 06 58 72
66559

லக்கி 7 VIP
திகதி 2024.06.25
சீட்டிழுப்பு இலக்கம் 0341
W 8 6 8 7 5 8 W

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3757
சீட்டிழுப்பு திகதி 25.06.2024
Z 41 45 69 78
Z
16678

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.06.25
சீட்டிழுப்பு இலக்கம் 0824
கடகம் 03 28 37 48 கடகம்
67397 24

உத்தியோகபூர்வ முடிவுகள்
25.06.2024 வெற்றி வாரம் 223 சிவப்பு
V 3 0 7 8 6 7
36349
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20,346,776.00

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2489 வர்ணம் வெளிர் நீலம்
சீட்டிழுப்பு திகதி 25.06.2024 தினம் செவ்வாய்
18 59 63 72 Q
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 95,275,296.80

சனிதா
திகதி 2024.06.25 வெற்றி வாரம் 4650
02 11 36 59 Y
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.62,736,738.80
39612

சசிரி
வெற்றி வாரம் 494
சீட்டிழுப்பு திகதி 2024.06.25
09 45 50
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,679,520/-

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4201 வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2024.06.25 தினம் செவ்வாய்க்கிழமை
13 36 54 56 மிதுனம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.7,259,036.40
354290

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
R 04 11 40 62 66
1665
25.06.2024 செவ்வாய்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 529,579,413.00

அத கோடிபதி ADA KOTIPATHI
செவ்வாய்க்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.122,821,471.20
14 23 56 70 M
227212


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிற்சங்கங்களின் கோரிக்கையை நிறைவேற்ற பணம் இல்லை

## அமைச்சர் பந்துல குணவர்தன



அரச ஊழியர்கள் உள்ளிட்ட தொழிற்சங்கங்கள் முன்வைக்கும் கோரிக்கைகளை நிறைவேற்றத் தேவையான பணம் திறைசேரியில் இல்லை. அடுத்த வருட வரவு - செலவு திட்டத்தில் அவர்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாண நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

கல்விசாரா ஊழியர்கள் உள்ளிட்ட தொழிற்சங்கங்கள் முன்னெடுத்துவரும் தொழிற்சங்க போராட்டம் மற்றும் சம்பள முரண்பாடுகளுக்கு எடுக்க இருக்கும் தீர்வு தொடர்பாகக் கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்து குறிப்பிடுகையில்,

நாட்டு மக்களின் வரிப் பணத்திலிருந்தே அரச ஊழியர்களுக்குச் சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் செலுத்தப்படுகின்றன. அதற்காக இந்த வருடம் ஒதுக்கீடு இல்லாமையால் ஜனாதிபதியினால் விசேட நிபுணர்கள் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டிருக்கிறது.

அனைத்து அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபன நியதிச் சபைகளின் சம்பள முரண்பாடு உள்ளிட்ட ஏனைய விடயங்கள் தொடர்பில் இந்த விசேட நிபுணர்கள் அடங்கிய குழுவில் அனைத்து தரப்பினர்களின் பிரச்சினை தொடர்பில் குழுவில் ஆராயப்பட்டு, குழுவின் பரிந்துரைக்கு அமைய அனைத்து தரப்பினர்களுக்கும் தீர்வு கிடைக்கும் வகையில் அடுத்த வருட வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படும் என்ற உறுதி வழங்கி இருக்கிறோம்.

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலையில் சம்பள அதிகரிப்பு மேற்கொள்ள முடியுமான நிலை இல்லை என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

தொழிற்சங்கங்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து போராட்டம் மேற்கொள்ளலாம். ஆனால் அவர்களின் கோரிக்கைக்கமைய சம்பள அதிகரிப்போ வேறு கொடுப்பனவுகளையோ வழங்குவதற்கு தற்போது திறைசேரியில் பணம் இல்லை என்றார். (ம-7,10)

# வடமராட்சியில் விபத்து குடும்பஸ்தர் படுகாயம்

வடமராட்சி மந்திகை எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன்பாக இடம்பெற்ற விபத்து சம்பவத்தில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் தலையில் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று செவ்வாய்க்கிழமை (25) முற்பகல் இடம்பெற்ற இவ் விபத்தில் பத்தினியம்மன் கோவிலடி, துன்னாலை வடக்கைச் சேர்ந்த நாகராசா பாலச்சந்திரன் (வயது-39) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

பிரதான வீதியால் வந்து எரிபொருள் நிலையத்திற்கு திரும்பிய டிப்பர் வாகனமும் மோட்டார் சைக்கிளுமே மோதி விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில் படுகாயமடைந்தவர் பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலை அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இச் சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை போக்குவரத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-7,10,60)

### சாவகச்சேரியில் பெரியளவிலான மாவிலை

# வியப்பாக பார்வையிட்டு செல்லும் பொதுமக்கள்



(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரியில் மாவிலை ஒன்று வழமைக்கு மாறாக பெரியளவில் காணப்படுவதால், அவற்றை அப்பகுதி மக்கள் நேரில் சென்று பார்வையிட்டு வருகின்றனர்.

சாவகச்சேரி டச்சு வீதியில் உள்ள வீடொன்றின் முற்றத்தில் உள்ள மாமரம் ஒன்றில் மாவிலைகள் சாதாரண மாவிலையை விட மிக பெரியளவில் காணப்படுகிறது.

சாதாரண மாவிலைகள் சுமார் 30 சென்ரி மீட்டர் நீளமுடையதாக காணப்படும் நிலையில் குறித்த மாவிலை 60 சென்ரி மீற்றர் நீளம் , 20 சென்ரி மீற்றர் அகலமுடையதாக காணப்படுகிறது.

இவ்வாறு பெரியளவில் காணப்படும் மாவிலையை அப்பகுதி மக்கள் வியப்பாக பார்வையிட்டு செல்கின்றனர். (ம-7,10,33)

# எமது பாரம்பரியங்களை நாமே பாதுகாக்க வேண்டும்

## வடமாகாண ஆளுநர் சார்ள்ஸ்

(யாழ்ப்பாணம்)

எமது பாரம்பரியங்களை நாமே பாதுகாக்க வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் சங்கானை பஸ் தரிப்பிட சதுக்கத்தில் புதிதாக அமைக்கப்பட்ட அம்மாச்சி பாரம்பரிய உணவகத்தை வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் அவர்கள் நேற்று திறந்து வைத்தார்.

அம்மாச்சி பாரம்பரிய உணவகத்தை திறந்து வைத்த ஆளுநர், உணவகத்தின் விற்பனை செயற்பாடுகளையும் ஆரம்பித்து வைத்ததுடன், வலிகாமம் மேற்குப் பகுதி பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவிகளையும் வழங்கி வைத்தார். உள்ளூர் கலைஞர்கள் மற்றும் விவசாயிகள் இதன்போது கௌரவிக்கப்பட்டதுடன்,

வறிய குடும்பங்களை சேர்ந்த மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் உரையாற்றிய வடக்கு மாகாண ஆளுநர், மக்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய வகையில் மக்களோடு இணைந்து பிரதேச சபைகள் செயற்பட வேண்டும்.

அதற்கமைய பல சிறப்பான வேலைத்திட்டங்கள், உள்ளூராட்சி நிறுவனங்கள் ஊடாகவும், மாகாண சபையினூடாகவும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மாகாணத்தில் வசிக்கும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதே எமது நோக்கமாகும். ஒவ்வொரு பிராந்தியங்களுக்குமான வெவ்வேறு தனித்துவங்கள் காணப்படுகின்றன.

எமது மண்ணின் தனித்துவங்களையும் பாரம்பரியங்களையும் நாமே பாதுகாக்க வேண்டும். யாழ்ப்பாண உணவுகளுக்கு வெளி பிரதேச மக்களிடமும், வெளிநாட்டு மக்களிடமும் அதிக வரவேற்பு காணப்படுகின்றது. அவற்றை தொடர்ந்தும் பேணி பாதுகாக்க வேண்டும்.

அம்மாச்சி பாரம்பரிய உணவகங்கள் ஊடாக தொடர்ச்சியாக மக்களுக்கான தரமான, சுவையான உணவுகள் வழங்கப்பட வேண்டும் என தெரிவித்தார். (ம-7,10)

## நூல் கண்காட்சியும் விற்பனையும்

சிறுகதை நூல் கண்காட்சி, விற்பனை மற்றும் புத்தகங்கள், வாசிப்பு, பரவலாக்கம் செயற்திட்ட அரங்கு நிகழ்வு இன்று புதன்கிழமை மாலை 03 மணி முதல் இரவு 07 மணி வரை பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூதுக் கலையகத்தில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் தமிழ்நாட்டைச் சேர்ந்த தமிழ்ச் சிறுகதை எழுத்தாளரும், பதிப்பாசிரியருமான பவா. செல்லத்துரை கலந்துகொண்டு உரையாற்றவுள்ளார். (ம-7,10)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-0679)

076 825 7716 (ஆகாஸ்)

பெண் வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் அமைந்துள்ள செல்லப்பிராணிகள் விற்பனை செய்யும் கடை ஒன்றிற்கு 18 - 30 வயதுடைய பெண் வேலையாள் தேவை.

- மதிய உணவு வழங்கப்படும்.
- மாதம் 30,000 அடிப்படைச் சம்பளம் வழங்கப்படும்.
- நிரந்தர வேலை வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு : (0113)

077 937 0000, 075 988 1000

வங்கி மீதி வசதி (Show money)

சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக் கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்

தொடர்புகளுக்கு: (0111)

074 17 37 684

Care Giver - பராமரிப்பாளர்

கனடா, அமெரிக்கா, ஜேர்மனி போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma

கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - வீசா சேவைகள். (இரு பாலரும் விண்ணப்பிக்கலாம்)

(C-0678) CIMS College 49A, Chapel Street, Jaffna.

College Of International Migration Skills 0777 068 777 / 077 7719 322

நல்லூரில் வீட்டின் பகுதி வாடகைக்கு

இரண்டு பெண்கள் மட்டும் குடியிருக்கலாம். தனி அறை, மிக சிறிய சமையல் அறை, இணைந்த குளியலறை, பெரிய ஹோல் கொண்டது.

Rent - 16,000/=

Call : (C-2325)

071 223 4566

வேலைக்கு ஆட்கள் தேவை

தையல் நிலையத்திற்கு பெண்கள் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

கொக்குவில் மேற்கு (1338)

076 105 6343

அனைத்து நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுக்கள் குறைந்த விலையில்

- Air Ticket Date Change
- Travel Insurance
- Online Visa Appoinments
- Travel Itinerary
- Sri Lanka Visa Extension
- All Country Visa Services

உங்கள் அருகாமையில் எமது நேரடி கிளைகள்

கொழும்பு | மட்டக்களப்பு | திருகோணமலை | கிளிநொச்சி | புதுக்குடியிருப்பு | கொடிகாமம் | சாவகச்சேரி | புத்தூர் | யாழ்ப்பாணம் | நாச்சியார் கோவிலடி | பண்டத்தரிப்பு | சுன்னாகம் | மானிப்பாய் | சங்கானை | கோப்பாய் | நெல்லியடி | பருத்தித்துறை | வல்வெட்டித்துறை (C-0678)

V2 TRAVELS 0768226240 0768226241

V2 VISA SERVICES கனடா

077 77 20 322 077 77 19 322

Visit Visas Air Tickets

- கனடா PASSPORT APPOINMENTS

விமான பயணச்சீட்டுக்கள்

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு (C-0678)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.06.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org